
குணம் ... மணம் ... சுவைகளுக்கு

பெயர் பெற்ற சிவபுரி புகையிலை

உபயோகியுங்கள் ! உள்ளங் களிருங்கள் !!

புகையிலை பயிர் செய்வோரின் கூட்டுறவு கொண்டு கலப்பற்ற அசல் சிவபுரிப் புகையிலை முதல் முதலாக விற்பனை செய்கிறோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இலைகளாகவும் பாக்கெட்டுகளாகவும் கிடைக்கும். சிவபுரி புகையிலை என்ற பெயர் ஒவ்வொரு பாக்கெட்டிலும் இலையிலும் காணலாம்.




விலை விபரம்

இலைகள் { ஸ்பெஷல் பவுண்டு 1-க்கு ரூ. 3-0-0
முதல்தரம் .. .. ரூ. 2-8-0 }

வியாபாரிகள் தேவை !

சிவபுரி புகையிலை கம்பெனி, லிமிடெட்.,

சிவபுரி (Via) சிதம்பரம்



கல்கி

பொருளடக்கம்

மலர் 6 | இதழ் 11

1946 அக்டோபர் 13

வியய புரட்டாசி 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

சூலமங்கலம் வைத்யனாத பாகவதர் ஞாபகார்த்த
குருகுல நிதிக்காக

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி, மதராஸ்

(ரிஜிஸ்டர்ட்)

கோகலே ஹாலில்

மகத்தான சங்கீத விழா

1946ஞ் அக்டோபர் மீ 23உ புதன்கிழமை, டாக்டர் ஸர் அளகப்பச் செட்டியார் (பார்-அட்-லா) அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

★

நிகழ்ச்சி முறை D. V.

23-10-46 புதன் மாலை 5-30 மணி
ஸ்ரீ சித்தூர் சுப்ரமணிய பிள்ளை

24-10-46 வியாழன் மாலை 6 மணி
ஸ்ரீ சங்கீத கலாநிதி
மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர்

25-10-46 வெள்ளி மாலை 6 மணி
ஸ்ரீ சங்கீத கலாநிதி
முசிரி சுப்ரமணிய அய்யர்

26-10-46 சனி மாலை 6 மணி
ஸ்ரீ கான கலாதர
மதுரை மணி அய்யர்

27-10-46 ஞாயிறு மாலை 6 மணி
ஸ்ரீ பேபி கமலா
(பரத நாட்டியக் கச்சேரி)

28-10-46 திங்கள் மாலை 6 மணி
ஸ்ரீ வி. வி. சடகோபன்

29-10-46 செவ்வாய் மாலை 6 மணி
ஸ்ரீ காயக சிகாமணி அரியக்குடி
ராமானுஜ அய்யங்கார்

30-10-46 புதன் மாலை 6 மணி
ஸ்ரீ இசை அரசு தண்டபாணி தேசிகர்

தகுந்த பக்க வாத்தியங்களுடன்

பிரவேசக்கட்டணம் :

ஸீஸன் : முதல் வகுப்பு ரூ. 15
,, : இரண்டாம் வகுப்பு ரூ. 10

மெம்பர்களுக்கு :

ஸீஸன் : முதல் வகுப்பு ரூ. 10
,, : இரண்டாம் வகுப்பு ரூ. 7

தினசரி கட்டணம் ரூ. 5, 3, 1

23-10-46 கச்சேரிக்கு மெம்பர்களுக்கு டிக்கட் கிடையாது

டிக்கட்டுகள் கிடைக்குமிடம் : ஸொஸைடி ஆபீஸ், 285, சைனாபஜார் ரோடு, (டெலிபோன் கம்பெனிக்கெதிர்); கணேசன் & கம்பெனி, பேப்பர் மர்ச்சண்ட்ஸ், மலையபெருமாள் தெரு; ஜொவலர் பிரிண்டிங் ஒர்க்ஸ், 12, தம்புச் செட்டி தெரு, ஆர். எம். எஸ். & கம்பெனி, 16, பிராட்வே; விஸ்வநாதன் எலெக்ட்ரிகல் கம்பெனி, கிடங்குத் தெரு.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 11

என்ன சேதி?

என்ன சிரத்தை!

இந்த பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு இந்தியாவின் மேலிருக்கும் சிரத்தையைப்போல வேறு யாருக்கு வரும்?

பிரிட்டிஷ் பொது மக்கள் அவர்களை மந்திரி பதவிகளிலிருந்து விரட்டி, அவர்களுடைய கட்சியையும் ஏறக்குறையப் புதைத்துவிட்ட பிறகு கூட அவர்களுக்கு இந்தியாவின் மீதிருக்கும் அக்கரை குறையவே இல்லை.

சென்ற வாரம் பிரிட்டனில் கூடிய கன்ஸர்வேடிவ் மகாநாட்டில் தொழிற் கட்சி சர்க்காரை எதிர்ப்பதற்கு வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருந்தபோதிலும், அவர்கள் அதையெல்லாம் விட்டு விட்டு இப்போது இந்தியாவில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இடைக்கால சர்க்காரைப் பற்றியே கார சாரமாகவும் ஆத்திரமாகவும்' பேசியிருக்கிறார்கள்.

மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலுக்கோ பண்டித நேருவின் கையில் இடைக்கால சர்க்கார் ஒப்படைக்கப் பட்டிருப்பதைப் பார்த்துத் துக்கம் துக்கமாக வருகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்தபோது அங்கே நான்கு வகையான சுதந்தரங்களும் இருந்ததாகவும் இப்போது பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினால் இந்தியாவின் கதி என்னவாகுமென்பதை நினைத்துத் தாம் அஞ்சி நடுங்குவதாகவும் காப்டன் கம்மான்ஸ் என்பவர் வருத்தந் தோய்ந்த குரலில் சொல்லியிருக்கிறார். கன்ஸர்வேடிவ் கட்சிக்கு இந்தியாவின்மீது எப்போதும் அனுதாபம் உண்டென்றும் இந்தியாவுக்குச் சுதந்தரம் கொடுப்பதே அதன் லட்சியம் என்றும் மற்றொருவர் நெஞ்சில் கையை வைத்துக் கொண்டே சொன்னார். தொழிற் கட்சிக்கு அரசியலில் அனுபவம் போதாது என்று மற்றொருவர் ரொம்பப் பிரலாபித்தார்.

கரடி புகுந்தது

இவ்வாறு அவர்கள் வெகு அழகாகத் தங்கள் சுய புராணத்தைத் தாங்களே பாடிக் கொண்டும் சென்ற காலத்தை நினைத்து முகாரி ராகத்தில் ஒப்பாரி வைத்துக் கொண்டும் இருந்த சமயத்தில், சற்றும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. 'சிவ பூஜை வேளையிலே கரடி புகுந்தது போல' என்று சொல்வார்களே அந்த மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடந்தது.

சென்னை மாகாண சட்டசபையிலே பல வருஷ காலம் அங்கத்தினராக இருந்தவரும், இந்தியாவிலே இருபத்து மூன்று வருஷ காலம் இருந்து இந் நாட்டின் நிலைமையை எல்லாம் கண்ணை நன்றாகத் திறந்து பார்த்து அனுபவித்துச் சென்றவருமான டக்ளஸ் ரீட் என்பவர் எழுந்து நின்று, தம் சகாக்களை யெல்லாம் ஒரு முறை பார்த்து விட்டு, "உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் நான் ஒரு விஷயத்தைச் சொல்லியே ஆகவேண்டும்" என்றார். எல்லோரும் ஆவலாக நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். டக்ளஸ் ரீட் "கன்ஸர்வேடிவ் கட்சியாரை இந்தியப் பொது மக்கள் கொஞ்சங்கூட விரும்பவில்லை" என்று அத்தனை அங்கத்தினர்களுக்கு மத்தியிலே பட்டவர்த்தனமாகக் கூறினார். எல்லா அங்கத்தினர்களுக்கும் தலை சுற்றுவது போல இருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் போனால் மூர்ச்சையாகிக் கீழே விழக் கூடிய நிலைமையில் இருந்தார்கள். நல்ல வேளையாக, மாஜி உதவி இந்தியா மந்திரி பட்லர் அவர்களுடைய உதவிக்கு வந்தார். இந்தியர்கள் கன்ஸர்வேடிவ் கட்சியை வெறுப்பதாகவும் கன்ஸர்வேடிவ் கட்சிக்கு இந்தியாவில் ஆதரவில்லை யென்பதாகவும் டக்ளஸ் ரீட் சொன்னதைத் தாம் நம்பவில்லை யென்றும், கன்ஸர்வேடிவ் கட்சியை ஆதரிப்பதற்கு இந்தியாவில் பலர் இருப்ப

தாகவும் சொல்லி மேற்படி அங்கத்தினர்களின் மூர்ச்சையைத் தெளிய வைத்தார்.

உதவி செய்வார்களா?

மேற்படி மகாநாட்டில் பேசியவர்களுக்குள்ளே, நம்முடைய இடைக்கால சர்க்காரின் தலைவர் பண்டித நேருவின் கவனத்தைக் கவர்ந்து, உடனடியாக அவர் ஓர் அறிக்கை வெளியிடும்படியாகவும் செய்த பெருமை வின்டர்டன் என்னும் பிரபுவைச் சார்ந்ததாகும்.

வின்டர்டன் பிரபு ஒரு நியாயமான கேள்வி கேட்டார். அது என்னவென்றால், பண்டித நேரு இடைக்கால சர்க்கார் ஏற்படுத்திய பிறகு, பிரிட்டிஷ் துருப்புகளை வாபஸ் செய்வது பற்றி ஒன்றும் சொல்லாமல் ஏன் இன்னும் மௌனமாயிருக்கிறார் என்பதே.

இதற்குப் பண்டித நேரு தக்க முறையில் பதில் அளித்திருக்கிறார். பிரிட்டிஷ் துருப்புகளை ஒரு நாள் கூட இந்தியாவில் வைத்துக் கொள்ளும் உத்தேசம் இந்தியர்களுக்கு இல்லையென்றும், பிரிட்டிஷ் துருப்புகளை முதலில் கப்பலில் ஏற்றி அனுப்புவதுதான் காங்கிரஸின் இலட்சியம் என்றும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். அவர் அத்துடன் நிற்கவில்லை. பிரிட்டிஷ் துருப்புகளை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதற்குக் கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர்கள், உதவியளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்!

வின்டர்டன் பிரப்வும் அவருடைய கன்ஸர்வேடிவ் கட்சி சகாக்களும் மேற்படி உதவியளிக்க முன்வருவார்களா என்று பார்க்க வேண்டும். அப்படி முன்வராவிட்டால், அவர்கள் மேற்படி வாதத்தைச் சொன்னது வெறும் அரசியல் பித்தலாட்டம் என்றே ஏற்படும்.


அமெரிக்கா ஒப்புக்கொள்கிறது

மேற்கண்டவாறு, கன்ஸர்வேடிவ் கட்சிக்காரர்கள் இந்திய இடைக்கால சர்க்காரையும் அதன் அந்தஸ்தையும் ஒப்புக்கொள்ள மறுத்து அதற்குப் பல குறைகளைக் கற்பனை செய்து சொன்னபோதிலும், உலக முழுவதிலும் நமது தேசீய சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் நன்மதிப்பும் செல்வாக்கும் நமக்கு மிக்க சந்தோஷத்தை விளைவிக்கின்றன. கொஞ்ச நாட்களுக்கு முன்னால், பண்டித நேருவின் சார்பில் கிருஷ்ணமேனன் ருஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடாவை பேட்டி கண்டபோது, இந்தியாவுடன் ஸ்தானிக உறவு வைத்துக்கொள்ள ருஷ்யா தயாராயிருப்பதாக மாலடாவ் அறிவித்தார். அதைப் பின்பற்றி இப்போது அமெரிக்காவும் இந்திய இடைக்கால சர்க்காரை அங்கீகரித்து அதனுடன் ஸ்தானிக உறவு ஏற்படுத்திக் கொள்ளத் தயாராயிருப்பதாக அறிவித்திருக்கிறது. சுதந்தரப் பாதையில் புதிதாக இறங்கியிருக்கும் இந்தியாவுக்கு மற்றப் பெரிய தேசங்களின் இத்தகைய ஆதரவும் ஒத்துழைப்பும் மிக்க உதவியாக இருக்குமென்பதில் சந்தேகம் இல்லை.

போனஸ் குழப்பம்

நெல்லுக்குப் போனஸ் கொடுப்பது சம்பந்தமாகச் சென்னை சர்க்காரின் குழப்பமான உத்தரவுகளைப் பற்றி வந்தவாசியிலிருந்து வந்த கடிதம் ஒன்று இந்த இதழ் 'வட்ட மேஜை'யில் வெளியாகியிருக்கிறது. இதே விஷயத்தைப் பற்றி லால்குடி தாலூகா விவசாயிகள் சங்கத் தலைவர் ஸ்ரீ எல். என். பரமேசுவரம் பிள்ளை சென்னை சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் விண்ணப்பத்தின் பிரதியும், மற்றும் பல விவசாயிகளின் மகஜர் பிரதியும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. செப்டம்பர் மாதம் 15உக்குள் நெல் அளந்த விவசாயிகளுக்குக் கலத்துக்கு ஒரு ரூபாய்தான் போனஸாம். செப்டம்பர் 16உக்கு மேல் அக்டோபர் 31உ வரையில் நெல் அளப்பவர்களுக்கு மணங்குக்கு 2 ரூபாய் போனஸாம். நவம்பர் 1உயிலிருந்து 15உ வரையில் மறுபடியும் ஒரு ரூபாய் போனஸாம்! அர்த்தமற்ற, நியாயமற்ற, முன்னுக்குப் பின் முரணான சர்க்கார் உத்தரவுகளுக்குள்ளே இந்தப் போனஸ் உத்தரவுகள் தலைமை ஸ்தானம் பெறுகின்றன. முன்னால் அதிக சிரமம் எடுத்துப் பயிர் செய்து சீக்கிரத்தில் நெல் அளந்தவர்களுக்கு ஏன் குறைந்த போனஸ் கொடுக்க வேண்டும்? அதே மாதிரி எவ்வளவு பிரயத்தனம் எடுத்தும் எதிர்பாராத இயற்கைக் காரணங்களால் அறுவடை பிந்திப் போகலாம். அதற்காக ஏன் தண்டிக்க வேண்டும்? செப்டம்பர் மாதம் 1உயிலிருந்து நவம்பர் 15உ வரையில் எந்தத் தேதியில் குருவை நெல் அளந்தாலும் அதற்கு ஒரேவிதமாகப் போனஸ் கொடுப்பதுதான் நியாயமாகும்; அறிவுக்குப் பொருத்தமானதுமாகும். நமது உணவு மந்திரி ஸ்ரீ ராகவமேனன் இது விஷயத்தில் உத்தியோக வர்க்கத்தின் வெறும் பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்தி விட்டு நியாயமான முறையைக் கடைப்பிடிக்க உத்தரவிடுவார் என்று நம்புகிறோம்.

இப்படிச் செய்யலாமே!



"பிரிட்டிஷ் சோல்ஜர்களை இந்தியாவிலிருந்து எவ்வளவு சீக்கிரமாக அனுப்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அனுப்பிவிட வேண்டுமென்பதுதான் எங்கள் உத்தேசம்!" — பண்டித ஜவாஹர்லால் நேரு.

அதிசயப்படோம்!

மளிகைக்கடைக்கு வந்து, ''ஐயா! ஒரு படி அரிசி கொடுங்கள்!'' என்று ஒருவர் கேட்கிறார். ''பதிலுக்கு என்ன பண்டம் கொண்டு வந்திருக்கிறீர்?'' என்று கடைக்காரர் வினவுகிறார். ''ஒரு கட்டு வாழை இலை கொண்டு வந்திருக்கிறேன்'' என்கிறார் வந்தவர். ''ஒரு கட்டு வாழை இலைக்கு முக்காற் படி அரிசிதான் கிடைக்கும்!'' என்கிறார் மளிகைக் கடைக்காரர்.

இதே ரகத்தில் இன்னும் சில சம்பாஷணைகளைக் கேளுங்கள்:—

''கடைக்கார ஐயா! காப்பிக் கொட்டை இருக்கிறதா?''

''இருக்கிறது: நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?''

''பருத்திக் கொட்டை கொண்டு வந்திருக்கிறேன்.''

''நல்லது; ஒரு வீசை பருத்திக் கொட்டைக்கு ஒரு பவுண்டு காப்பிக் கொட்டை!'' * * *

''பார்க்கர் பவுண்டன் பேனா இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''எத்தனை வீசை புளி கொடுத்தால் ஒரு பார்க்கர் பவுண்டன் பேனா கிடைக்கும்?''

''முப்பத்திரண்டு வீசை புளி கொண்டு வாரும்!'' * * *

''ஐயா! நல்ல சட்டைத் துணி இருக்கிறதா?''

''இருக்கிறது!''

''மூன்று இரும்பு அடுப்பும் இரண்டு கல்லுரலும் கொண்டுவந்திருக்கிறேன். இரண்டரை கஜம் சட்டைத் துணி கொடும்!'' * * *

''ஐயா! ஒரு மூட்டை தவிடு கொண்டு வந்திருக்கிறேன். இதை எடுத்துக் கொண்டு ஒரு ரோஜாப்பூ மாலை கொடுப்பீரா?''

''ரோஜாப்பூ இப்போது விலை கிராக்கி. மூன்று மூட்டை தவிடு கொண்டு வாரும்.''

* * *

மேற்கண்டவாறெல்லாம் நமது பிரதம மந்திரி பிரகாசம்காரு அவர்களின் ஆட்சி காலத்தில் இந்த மாகாணத்தில் நடக்குமானால் நாம் நிச்சயம் அதிசயப்படோம்! ஆச்சரியப்படோம்! வியப்படையவும் மாட்டோம்!

ஏனென்றால், கனம் பிரகாசம் காரு அவர்களின் பொருளாதாரக் கொள்கைகளையும், வியாபார முறைகளையும் நாம் அறிந்திருக்கிறோம். அதோடு அவருடைய தைரியத்தையும், பிடிவாதத்தையும், என்ன கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தாலும் பின் வாங்காத தியாக புத்தியையும்கூட நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம்.

பல வருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீ டி. பிரகாசம்காரு ''சுயராஜ்யா'' என்னும் ஆங்கில தினசரியின் நிர்வாக ஆசிரியரா யிருந்தபோது ஓர் அபூர்வ ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதாவது ''சுயராஜ்யா'' பத்திரிகைக்குப் பணச் சந்தாதான் கட்ட வேண்டும் என்னும் அவசியம் இல்லையென்றும், சாமான்களாகவே சந்தா கட்டலாமென்றும் சொன்னார். அதன்படியே நெல்லும் அரிசியும் சந்தாவுக்காக வாங்கிக் கொள்ளும்படி மானேஜருக்கு உத்தரவு போட்டார். ''சுயராஜ்யா'' காரியாலயத்தில் பழைய பத்திரிகைகள் குவிந்திருந்த அறைகளை எல்லாம் நெல்லு மூட்டையும் அரிசி மூட்டையும் அடைத்துக் கொண்டன. சம்பளம் சரியாகக் கொடுபடவில்லை என்று புகார் சொன்ன உதவி ஆசிரியர்களையும் சிப்பந்திகளையும் கூப்பிட்டு, ''இனிமேல் சம்பளத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். சாப்பாட்டுக்கு வேண்டிய நெல்லையும் அரிசியையும் எடுத்துக் கொண்டு போங்கள்!'' என்றார்.

இந்த முறை அவ்வளவாகப் பலன் தரவில்லை! இதன் பயனாகவும் இது போன்ற மற்ற முறைகளின் விளைவாகவும் உரிய காலத்தில் ''சுயராஜ்யா'' பத்திரிகை நின்று போயிற்று.

பத்திரிகை என்பது தற்காலத்துக்குரிய நவீன சாதனம். வியாபாரத்தில் பண்டமாற்று முறையோ இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் அமுலில் இருந்தது. எனவே ஒன்றுக்கொன்று ஒத்து வரவில்லை.

ஆனால், நாம் அனுசரித்த முறையில் தவறு இருந்ததாக ஸ்ரீ டி. பிரகாசம் கருதவில்லை. அதுதான் உத்தமமான முறை என்று முழு நம்பிக்கை கொண்

டிருந்தார். அதனால் உண்டான நஷ்டங்களைச் சகித்துக் கொண்டார். பாரிஸ்டர் தொழில் செய்து அவர் சம்பாதித்திருந்த பல லட்சம் ரூபாயை மேற்படி "சுயராஜ்யா" பத்திரிகைக்காகத் தியாகம் செய்தார்.

ஸ்ரீ டி. பிரகாசத்தின் தீரத்தையும் உறுதியையும் தியாக புத்தியையும் அப்போதும் நாம் போற்றினோம்; இப்போதும் பாராட்டுகிறோம். ஆனால் அவருடைய முறைகள் பலனளிக்கக் கூடும் என்று அப்போதும் நாம் நம்பவில்லை; இப்போதும் நமக்கு அத்தகைய நம்பிக்கை இல்லை.

* * *

சென்ற வாரத்தில் நாம் ஸ்ரீ டி. பிரகாசம் அவர்கள் நன்றாக ஆலோசித்து ஆரம்பித்திருக்கும் கதர்த் திட்டத்தைப் பற்றிப் பாராட்டி எழுதியிருந்தோம். அதை எழுதிய பிறகு மேற்படி திட்டத்தை யொட்டிய ஒரு முக்கியமான விஷயம் வெளியாயிற்று. அதாவது இனிமேல் சென்னை மாகாணத்தின் புதிய நூல் ஆலைகளும் துணி நெய்யும் ஆலைகளும் ஏற்படுத்தப் பிரதம மந்திரி அநுமதி கொடுக்கப் போவதில்லையென்று தெரிந்தது. ஆலைகளை அதிகப்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் சென்னையின் விகிதாசாரத்துக்கு அநுமதித்திருக்கும் இயந்திர சாதனங்களை வேண்டாமென்று சொல்லிவிட்டதாகவும் தெரிந்தது. அதாவது இந்தியா முழுவதிலும் மொத்தம் 27½ லட்சம் ஆலைக் கதிர்களும் அதற்கேற்ப ஆலைத் தறிகளும் அதிகமாக்குவதற்குரிய இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதென்று தீர்மானித்து, அதில் 3½ லட்சம் ஆலைக் கதிர்களையும் அதற்குரிய ஆலைத் தறிகளையும் சென்னைக்குப் பங்கிட்டிருந்தார்கள். மேற்படி அதிகப்படி ஆலைக் கதிர்களையும் தறிகளையும் சென்னை சர்க்கார் வேண்டாமென்று மறுதளிக்கப் போவதுடன், கூடிய சீக்கிரத்தில் ஏற்கெனவே இம் மாகாணத்திலுள்ள துணி — நூல் ஆலைகளையும் மூடிவிடுவதென்னும் கொள்கையைப் பிரகாசம் சர்க்கார் கைக்கொண்டிருக்கின்றனர். இந்த விஷயத்தை முதலில் உணவு மந்திரி கனம் ராகவ மேனன் திருப்பூரில் வெளியிட்டார். பிறகு பிரதம மந்திரி பிரகாசம் அதை ஊர்ஜிதம் செய்தார்.

மேற்படி செய்தி நமக்குச் சிறிதும் ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை. ஸ்ரீ டி. பிரகாசம் இதுவும் செய்யக் கூடியவர், இன்னமும் செய்யக்கூடியவர் என்பது நமக்குத் தெரிந்த விஷயமே யாதலால் அதைப்பற்றி நாம் அதிசயப்படவில்லை; ஆனால் வருத்தப்பட்டோம். ஸ்ரீ டி. பிரகாசம் ஒரு மாதிரி பொது மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய நல்ல திட்டங்களை ஆரம்பித்திருக்கும் சமயத்தில் இந்த மாதிரி ஒரு தர்ம சங்கடத்தை உண்டாக்கிக் கொண்டாரே என்று வருத்தப்பட்டோம். அதோடு சென்னை மாகாணத்துப் பொது ஜனங்களை இந்தமாதிரி ஒரு தர்ம சங்கட நிலைமையில் கொண்டு வந்து விட்டு விட்டாரே என்றும் வருத்தப்பட்டோம். இதன் காரணமாக இம் மாகாணத்தில் ஏற்படக்கூடிய அரசியல் குழப்பங்களையும் சுயநல சூழ்ச்சிப் படலங்களையும் நினைத்து இன்னும் அதிகமாக வருத்தப்பட்டோம்.

* * *

முதலில் ஸ்ரீ பிரகாசத்துக்கு ஏற்பட்டிருக்கும் தர்ம சங்கடம் என்னவென்பதையும், பிறகு சென்னை மாகாணத்து மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் தர்ம சங்கடம் இன்னதென்பதையும் கவனிப்போம். பிறகு, இதனால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளைப் பற்றி யோசிக்கலாம்.

பொதுவாக கிராம நிர்மாணத்துக்காகவும், முக்கியமாகக் கதர் அபிவிருத்திக்காகவும் கனம் பிரகாசம் பட்ஜெட்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைத்ததோடு அதற்காக ஒரு திட்டமும் போட்டார். சர்க்கா சங்கத்தாரோடு கலந்தாலோசித்ததின் பேரில் அசல் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. அந்தத் திட்டத்துக்கு மகாத்மாவின் ஆசியைப் பெற்றுக்கொண்டு வருவதற்காகக் கனம் பிரகாசம் சென்றார். அதில் வெற்றியும் அடைந்தார்.

பிரகாசம் காருவின் கதர்த்திட்டம், ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய துணிக்குத் தாமே நூற்றுக் கொள்ள வேண்டும், ஒவ்வொரு பிரதேசமும் அந்தந்தப் பிரதேசத்துக்கு வேண்டிய நூலையும் துணியையும் உற்பத்தி செய்து கொள்ளவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது.

மேற்படி திட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது, மகாத்மா காந்தி கேட்டார்:— "இந்தக் கதர்த் திட்டத்தைச் சிரத்தையாக நடத்திவைக்கப் போகிறீர்களா? ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு வேண்டிய துணிக்கு அவர்களே நூற்றுக்கொள்ள வேண்டும் என்னும் திட்டத்தில் உங்களுக்கு உண்மையாக நம்பிக்கை உண்டா? அப்படியானால், ஆலைகளை அதிகப்-

படுத்திக் கொண்டு போவதில் அர்த்த மென்ன? ஆலை வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டு நிறுத்துவீர்களா?''

''ஆகா! கட்டாயம் நிறுத்துவேன்!'' என்றார் பிரதம மந்திரி பிரகாசம்.

''அப்படியானால் ரொம்ப சந்தோஷம். உங்களுடைய திட்டத்துக்கு என்னுடைய பூரண ஆசீர்வாதம்'' என்றார் மகாத்மா.

இம்மாதிரி காந்திஜிக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வந்த ஸ்ரீ பிரகாசம் இங்கே வந்ததும் அந்த வாக்கை நிறைவேற்றுவதற்கு நாலாபுறத்திலும் மகத்தான எதிர்ப்பைக் காண்கிறார்.

வியாபார சமூகம் ஒருமுகமாக 'ஆலை எதிர்ப்புத் திட்ட'த்தை எதிர்க்கிறது. பத்திரிகைகள் மூர்க்கண்யமாக எதிர்க்கின்றன. காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயும் மேற்படி திட்டத்துக்கு எதிர்ப்பு பலமாயிருக்கிறது. மந்திரி சபைக்குள்ளே எதிர்ப்பு இருப்பதாக வெளியாகியிருக்கிறது.

கனம் பிரகாசம் இந்தக் கதர் திட்டத்தையும் ஆலை ஒழிப்புத் திட்டத்தையும் மேற்கொண்டது காந்தி மகாத்மாவைச் சரிக் கட்டுவதற்காக என்று சிலர் சொல்கிறார்கள். இதை நாம் ஒப்புக் கொள்ளவில்லை. ஸ்ரீ பிரகாசம் அவர்கள் நீண்ட காலமாகவே இத்தகைய கொள்கைகள் உடையவர்தான். ''ஆலைத் தொழிலே உதவாது; கிராமக் கைத்தொழில்கள்தான் வேண்டும்; ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிராம வாசிகளுக்கு வேண்டிய பண்டங்கள் உற்பத்தியாக வேண்டும்; பண்டமாற்று மூலமாக வியாபாரம் நடைபெற வேண்டும்'' என்பது போன்ற கொள்கைகளில் ஸ்ரீ பிரகாசத்துக்குத் திடமான நம்பிக்கை உண்டு. இந்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காகக் ''கிராம உத்தியோகம்'' என்ற தெலுங்கு பாஷைப் பத்திரிகையையும் சில காலம் அவர் நடத்தினார்.

எனவே, கனம் பிரகாசம் அவர்கள் பிரஸ்தாப திட்டத்தில் உண்மையான நம்பிக்கையும் சிரத்தையும் கொண்டவர் என்பதில் சந்தேகமில்லை.

அந்தத் திட்டத்தின் மூலம் மகாத்மா காந்தியின் ஆதரவும் ஆசியும் தமக்குக் கிடைப்பதாயிருந்தால், அதை அவர் பெற்றுக் கொள்ள விரும்பியதிலும் தவறு ஒன்றும் கிடையாது.

எனினும் மேற்படி திட்டமானது அவரைப் பெரிய தர்ம சங்கடத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. அவருடைய திட்டத்துக்கு நாடெங்கும் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு அவருடைய பதவிக்கே நெருக்கடியை உண்டாக்கக் கூடும் என்று தோன்றுகிறது. திட்டத்தைக் கைவிட்டால் மகாத்மாவுக்கு அளித்த வாக்குறுதியைக் கைவிட்டதாகும். இரண்டு வழியிலும் சங்கடங்களும் அபாயங்களும் இருக்கின்றன.

*　　　*　　　*

சென்னை மாகாணத்துப் பொது ஜனங்களுக்கும் காங்கிரஸ்வாதிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் தர்மசங்கடம் என்னவென்றால் பொதுவாக அவர்கள் எல்லாரும் காந்தி மகானிடம் பக்தி கொண்டவர்கள். கதரியக்கத்தில் அபிமானமும் கொண்டவர்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் தாங்களே நூல் நூற்றுத் துணி செய்து கொள்ளும் அளவுக்குப் போகத் தயாராயில்லை. ஏற்கெனவே துணிப் பஞ்சத்தின் கொடுமை நாட்டைப் பீடித்திருக்கும்போது ஆலைகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதையும், இருக்கிற ஆலைகளுக்கு உலை வைப்பதையும் அவர்கள் விரும்பவில்லை. அதிலும் மற்ற மாகாணங்கள் பின்பற்றாத வழியில் நாம் மாத்திரம் ஏன் போகவேண்டும் என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அதே சமயத்தில் மகாத்மா காந்தியின் ஆசி பெற்ற திட்டத்தை எதிர்ப்பதற்கும் அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கும் மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்ட காங்கிரஸ் அபிமானிகளுக்கும் இப்போது நேர்ந்திருக்கும் தர்ம சங்கடம் இதுதான்.

*　　　*　　　*

மேற்கூறிய தர்ம சங்கடங்கள் ஒருபுறமிருக்க, ஸ்ரீ பிரகாசத்தின் கதர்த் திட்டத்தின் காரணமாக இம் மாகாணத்தில் ஒரு பெரும் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

பிரகாசம் மந்திரி சபையைக் கலைத்துப் புனர் நிர்மாணம் செய்ய வேணுமென்று காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் சுமார் 120 பேருக்கு மேல் கையெழுத்துப் போட்டிருப்பதாக ஒரு செய்தி வெளியாயிற்று. பின்னால், அந்தச் செய்தியில் உண்மையில்லை, வெறும் பத்திரிகைச்சரடு என்று சொன்னார்கள்.

மேற்படி குழப்பம் ஒருவாறு தீர்ந்து விட்டது என்று நினைத்திருந்த சமயத்தில் அதைவிடப் பெரிய குழப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

பிரகாசத்தின் ஆலை ஒழிப்புத் திட்டத்தைக் கண்டனம் செய்து தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் செய்திருக்கிறது.

ஆனால் அதே திட்டத்தை முழு மனதுடன் வரவேற்று வாழ்த்துக் கூறுவதாக ஆந்திர மாகாண காரியக் கமிட்டி தீர்மானம் செய்திருக்கிறது!

மந்திரி சபைக்குள்ளேயே இது விஷயமாய் பிளவு ஏற்பட்டு அது அம்பலத்துக்கும் வந்திருக்கிறது.

கனம் பி. எஸ். குமாரசாமி ராஜா பிரதம மந்திரியின் திட்டத்தைப் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

ஸ்ரீ குமாரசாமி ராஜாவும் ஆஜராகியிருந்த மந்திரி சபைக் கூட்டத்திலே தான் மேற்படி விஷயம் விவாதிக்கப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது என்று பிரதம மந்திரி பிரகாசம்காரு சொல்கிறார்.

ஸ்ரீ குமாரசாமி ராஜாவின் போக்கு பரிசீலனை செய்யப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்.

மந்திரி சபையிலிருந்து தமிழ்நாட்டு மந்திரிகள் விலகிக்கொள்ளும்படி தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி கட்டளையிடலாம் என்று சொல்லப்படுகிறது.

மொத்தத்தில் சென்னை மந்திரி சபையின் கௌரவமும் கட்டுப்பாடும் சீர்குலைந்து பரிகாசத்துக்கு இடமாகிவிட்ட தென்பதில் சந்தேகமில்லை.


* * *

சென்னை மாகாணத்தின் கௌரவத்தையும் நல்ல பெயரையும் முன்னிட்டு இத்தகைய கேவலமான நிலைமை சீக்கிரத்தில் சீர்திருத்தப்படும் என்று நம்புகிறோம்.

கொஞ்சம் முயற்சி செய்தால் அதற்கு வழி கண்டுபிடிப்பது அசாத்தியமாகாது. அதாவது நூல் பஞ்சத்தையும் துணிப் பஞ்சத்தையும் அதிகமாக்காமலும், பொதுஜனங்களுக்குத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தாமலும், தக்க முறையில் கதர்த் திட்டத்தை அமைத்து மகாத்மாவையும் திருப்தி செய்தல் சாத்தியம் என்று நாம் நம்புகிறோம். அதற்குரிய முயற்சியை உடனே தொடங்கி நடத்த வேண்டுமென்று சென்னை மாகாணத்தின் நன்மையிலும் நல்ல பெயரிலும் கவலையுள்ள அரசியல் பிரமுகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

நல்ல செய்தியும் துயரச் செய்தியும்





வட்டமேஜை

வந்தவாசி
25—9—46

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு.

இந்த வருஷ ஆரம்பத்தில் அட்வைஸரி சர்க்கார் எக்காரணத்தைக் கொண்டும் நெல் விலையை அதிகப்படுத்தப் போவதில்லை என்று விளம்பரம் செய்தார்கள். பிறகு இரண்டொரு மாதத்திலேயே மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் விதம் விலையை அதிகப்படுத்தி விட்டார்கள். சர்க்கார் அதிகாரிகளே சொல்லி விட்டார்களே என்று நம்பி முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே விற்றார்கள் சில விவசாயிகள். பொறுப்பற்ற சர்க்கார் இருந்தாலே இப்படித்தான் நடக்கும் என்று எண்ணியவர்களும் உண்டு.

ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனங்களுக்காக நிர்வாகத்தை நடத்த ஜனங்களின் பிரதிநிதி சர்க்கார் அமுலுக்கு வந்தது. உணவு நெருக்கடியைக் கண்ட பிரதம மந்திரி ஸ்ரீ பிரகாசம்காரு விவசாயிகளுக்காக ஒரு பிரத்தியேக விளம்பரத்தை விடுத்தார். ஜுலை மாத முடிவிற்குள் தங்களிடமுள்ள நெல்லை விற்கும் விவசாயிகளுக்கு மணங்கு ஒன்றுக்கு இனாம் ஒரு ரூபாய் என்றும், ஜுலைக்குப் பிறகு பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து வாங்கும் நெல்லுக்கு இனாம் கிடையாது என்றும், மணங்கு ஒன்றிற்கு எட்டணா விதம் குறைத்துவிடப் போவதாகவும், பதுக்கி வைத்திருப்பவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு நெல் விற்பவர்களிட மிருந்து விலையில் பிடித்துக்கொண்ட தொகையை இனாமாகக் கொடுக்கப் போவதாகவும் கூறினார்.

ஜனநாயகப் பொறுப்புள்ள சர்க்கார் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என இராது என்று நம்பி, விவசாயிகள் தங்களிடமுள்ள நெல்லைக் காலி செய்துபோட்டார்கள். எங்கள் தாலுகா மாத்திரம் 34 ஆயிரம் இனாமாகப் பெற்றது என்றால் கேட்கவேண்டுமா? இதைப்பற்றி எங்கள் தாலுகா உணவுக் கமிட்டிக் கூட்டத்தில் எங்கள் தொகுதியின் சட்ட சபைப் பிரதிநிதி, தாம் கடந்த தேர்தலில் ரூபாய் ஆயிரம் செலவு செய்ததால்தான் இந்த 34 ஆயிரம் போனஸாக எங்களுக்குக் கிடைத்த தென்றும், மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா என்றும் பெருமையாகப் பேசினார்.

பிரகாசம் சர்க்கார் இருட்டிலுள்ள விவசாயிகளுக்கு வெளிச்சத்தைக் காட்ட முனைந்து, 'அக்டோபர் முடிவிற்குள் நெல்லை விற்கும் மணங்கு ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இனாம்' என்று சமீபத்தில் விளம்பரப்படுத்தினார்கள். ஆனால், பொதுஜன சர்க்காரிடம் உண்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கம் கொண்ட விவசாயிகளின் ஏமாற்றந்தான் என்னே! சர்க்காரை ஏமாற்றிப் பதுக்கி வைத்துக் கொண்டிருந்த விவசாயிகளின் பாடு கொள்ளையோ கொள்ளை!! 'லஞ்சத்தை ஒழிக்கப் போகின்றோம், பதுக்கி வைத்திருப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கப் போகின்றோம்!' என்றெல்லாம் விளம்பரப் படுத்தி விட்டுக் கடைசியில் நெல்லைப் பதுக்கி வைத்திருந்தவர்களை லாபமடையச் செய்திருக்கும் பொதுஜன சேவா மந்திரிகள்!

எங்கள் பண்ணையாள், "ஏன், சாமி! இனாம் வருகிறதென்று ஊருக்குமுன் நெல்லைக் காலி செய்து போட்டீங்களே? இப்போ வண்டி ஒன்றுக்கு ரூபாய் 32 இனாம் என்று தண்டோரா போடுறாங்களே! என்ன சாமி, 'வெள்ளைக்காரன்கள் தான் தினம் தினம் நெல் விலையை ஏத்துவதும் குறைப்பதுமா யிருக்கிறாங்க; நம்மவங்க வந்தால் இந்தத் தொல்லை தீர்ந்துவிடும்' இன்னீங்களே! என்ன போங்க, வித்தியாசம் ஒன்றும் காணோமே?" என்று என்னைக் கேட்கிறான்.

ஏமாந்த விவசாயி.

கொளத்துப் பாளையம்
7—10—46

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

அக்டோபர் 6-ம் தேதி இதழில் கிராம ஆஸ்பத்திரி வைத்தியர் ஒருவர் எழுதி யிருந்த கடிதத்தைப் பார்த்தேன். அதைப் பற்றி மேலும் சில விவரங்கள் கொடுக்கிறேன்.

கிராம ஆஸ்பத்திரிகளில் சில இடங்களில் L. I. M. டாக்டர்களும், சில இடங்களில் L.M.P. டாக்டர்களும் தொழில் செய்து வருகிறார்கள்.

நான் L. I. M. பத்திரம் பெற்றவன். சுமார் இரண்டு ஆண்டுகளுக்குமுன் சென்னை இந்திய வைத்திய மேல் அதிகாரிக்கும் பஞ்சப்படியைப் பற்றி விண்ணப்பித்துக் கொண்டேன். அதற்கு, "L. I. M. டாக்டர்கள் முழுதும் ஆங்கில முறைப்படியோ இந்திய வைத்திய முறையையோ சாரவில்லை. ஆதலால் சர்க்காரும் உதவி செய்வதற்கு இல்லை; ஸ்தல ஸ்தாபனமும் உதவி செய்வதற்கு இல்லை!" என்று பதில் கிடைத்தது.

கிராம ஆஸ்பத்திரி சம்பந்தமாக அநாவசியமான, அபரிமிதமான அதிகாரிகளுக்கு ஆளாக்கப்படுகிறோம். பிணியுற்ற பொது மக்கள் சேவையையும் புறக்கணிக்குமாறு நிர்ப்பந்தப் படுத்தும் கணக்குகள் வேறு எங்களைத் தொந்தரவு செய்கின்றன. இவ்வளவுக்கும் சம்பளம் நாளது வரை மாதம் ரூ. 41—0—0 சிரஞ்சீவியாக இருந்து வருகிறது.

மற்றொரு குறை தகுந்த ஆஸ்பத்திரி கட்டடங்கள் இல்லாமை. சாதாரணமாய் எல்லா கிராமங்களும் செழிப்பாக இருப்பது இல்லை. ஆதலால் செல்வந்தர்கள் இல்லாமல் இருப்பதும் சகஜம். சில கிராமங்கள் தொன்று தொட்டு அமைந்த அமைப்பு அந்த ஸ்தலவாசிகள் நாளடைவில் தங்கள் வீட்டையே விஸ்தரிக்க முடியாதவாறும், ஊரும் விஸ்தாரமாகாதவாறும் அமைந்துள்ளன. இந்தக் காரணங்களால் ஆஸ்பத்திரிக்கு அடிப்படையான கட்டடமே இல்லாமற் போகிறது.

சர்க்கார் உத்தரவு பொது மக்கள் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது; இது என்றும் பூர்த்தியாவது கிடையாது.

சர்க்கார் கிணறு வெட்டப் பல வகையும் ரூபாய் செலவு செய்கிறது. சாதாரணமாய்த்

தற்கால விலைவாசி உயர்வில் ஒரு நல்ல கிராம ஆஸ்பத்திரி கட்ட ரூபாய் 5000 ஆகும்.

வருஷம் ஒவ்வொரு ஜில்லாவிற்கு 20 ஆஸ்பத்திரி கட்டடங்களை வீதம் 26 ஜில்லாக்களுக்கும் கட்டிக் தருவது என்றால் சர்க்காருக்கு 26 லக்ஷம் ரூபாய் செலவாகும். கிராம நிர்மாணத் திட்டமே பெரிது என்று முரசு கொட்டும் காங்கிரஸ் சர்க்கார் இதை ஆராய்ந்து விரைவில் வேண்டுவன செய்ய வேண்டும்.

K. G. அனந்த சுப்பிரமணியன் L. I. M.

திருவேங்கிமலை
7—10—46

ஐயா, கிராம தேவதைகளுக்குப் பிரார்த்தனைக்காக எருமைக் கடாக்களைப் பலியிடும் வழக்கம் இந்நாடுகளில் தொன்று தொட்ட வழக்கமாக இருந்து வருகின்றது. இந்த வழக்கத்தின் மூலகாரணத்தை இப்போது ஆராய்ந்து பார்ப்பது அவசிய மில்லை. வேலைக்கு உபயோகப் படக்கூடிய ஆயிரக் கணக்கான கால்நடைகள் விவசாயத்துக்குக் கொடிய பாதகம் விளைவிக்கக்கூடிய அளவுக்கு மேலாக ஒவ்வொரு வருஷமும் கிராம தேவதைகளை முன்னிட்டு ஈவு இரக்கமின்றிக் கொல்லப்பட்டு வருகின்றன.

பொதுஜன சம்மதத்தைச் சௌஜன்ய முறையில் சம்பாதித்துக் கொண்டால் எவ்வித கஷ்டமான காரியங்களையும் சாதித்து விடலாம் என்பதற்கு அடியில் கண்ட சம்பவம் ஒரு முக்கியமான அத்தாட்சியாகும்.

திருச்சிறாப்பள்ளி ஜில்லாவின் தென்மேற்கு பாகத்தில் உள்ள கடவூர் எஸ்டேட்டைச் சேர்ந்த மேட்டுப்பட்டி என்னும் கிராமத்தில் பிரபல்யம் பெற்ற ஒரு ஆச்சக்கையம்மன் கோவில் இருக்கிறது. அந்த ஆச்சக்கையம்மனுக்கு ஆறு வருஷங்களுக்கு ஒரு முறை மகோற்சவம் நடைபெறும். உற்சவத்தின் நூற்றுக் கணக்கான எருமைக் கடாக்களை பலியிட்டு வருவது வழக்கம். அந்த எஸ்டேட் தற்சமயம் கோர்ட் ஆப் வார்ட்ஸ் (Court-of Wards) மானேஜ்மெண்டின் கீழ் இருந்து வருகிறது. ஆச்சக்கையம்மனுக்குச் சென்ற ஆனி மாதத்தில் மகோற்சவம் நடைபெற்றது. இந்த உற்சவத்தில் எருமைக் கடாக்களைப் பலியிடும் கொடிய வழக்கத்தைச் சமாதான முறையில் நிறுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் படிக்கும் பலியிடப் படுவதினின்று எத்தனைகால் நடைகளைக் காப்பாற்ற முடியுமோ அத்தனை கால்நடைகளையும் காப்பாற்ற முயற்சி எடுக்க வேண்டுமென்றும் எஸ்டேட் மானேஜருக்கு அனுமதி கொடுக்கப் பட்டது. பலியிடப் படுவதற்காக கோவிலுக்குக் கொண்டுவரப்பட்ட 788 எருமைக் கடாக்களில் இருபத்தி ஐந்து கடாக்களை மட்டும் அம்மனுக்குப் பலியிட்டுவிட்டு பாக்கி 763 எருமைக் கடாக்களைப் பலியிடாமல் ஏலம் போட்டு ஏலத்தில் ரூ. 7,175 வரையில் இதுவரை வருமானம் வந்திருக்கிறது. இன்னும் விற்பனைக்கு 50 ஜோடி மாடுகள் வரையில் இருக்கின்றன. எஸ்டேட் மானேஜர் ஸ்ரீ சிவ சிதம்பரம்பிள்ளை எடுத்துக்கொண்ட சமயோசிதமான சௌஜன்ய நடவடிக்கையினால் விவசாய வேலைக்கு லாயக்கான 763 எருமைக்கடாக்கள் உயிர் தப்பியது மல்லாமல் மேற்படி கோவிலுக்கு ஒருநாளும் எதிர்பாராத ஏராளமான வருமானமும் கிடைத்திருக்கிறது.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.



வான சஞ்சாரம்

இசைத் தேனீ

'நமது சங்கீதம்' என்பதைப் பற்றிய 3-வது விமர்சனம் திருச்சியில் அக்டோபர் 1உ நிகழ்ந்தது. உதயராக இனத்தைச் சேர்ந்த புறநீர்மை என்ற பண்டையத் தமிழ்ப் பண்ணும், ரேவா என்ற ஹிந்துஸ்தானி ராகமும், பௌளி, ரேவகுப்தி என்ற இக்காலகர்நாடக ராகங்களும் விளக்கப்பட்டன. இவை மத்யமமில்லாது, சுத்தரிஷப சுத்ததைவதப் பிரயோகத்தினால், காலையில் துயிலெழுந்து கடவுளைத் தொழும் பாவத்தைக் கொடுக்கின்றன என்றும், பாணிகளில் வேற்றுமை யிருப்பினும் உள்ளக் கிளர்ச்சியில் ஒற்றுமை கொண்டவை என்றும் சொல்லப்பட்டன. நிரூபணம் அழகாயிருந்தது. 'ஸ்ரீ பார்வதி' என்ற தீக்ஷிதரின் பௌளி கிருதியை நிலைய வாத்ய கோஷ்டியார் நாத அமைப்புடன் வாசித்தனர்.

புறநீர்மை என்ற 5 ஸ்வரங்கள் கொண்ட பண்டையத் தமிழ்ப் பண்ணுக் கொத்த இக்கால ராகங்களைக் குறிக்கும் புஸ்தகங்களில், ரேவகுப்தி, பௌளி, பூபாளம் என்ற பெயர்களைக் காணோம். வேறு ராகங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரே ராகத்திற்குப் பல பெயர்கள் கொடுப்பதும், உருமாற்றி வழங்குவதுமான குழப்பம் அக்காலத்திலும் இக்காலத்திலும் உண்டு. வெகு காலத்துக்கு முன் கையாளப்பட்டு வந்த தமிழ்ப் பண்கள் பின்னர் மறக்கப்பட்டும், முறை விளக்கும் ஆதார நூல்கள் இல்லாமலும் போயின. ஆகவே, இப்போது கோயில்களிலும் மற்ற இடங்களிலும் பாடப்பட்டு வரும் தேவாரப் பண்கள், உண்மையில் அடிப்படை உருவம் சிதையாது கர்ண பரம்பரையாய் வந்த பண்முறைதானா, அதற்குப் போதிய அத்தாட்சி உண்டா என்பதையும் விளக்கினால் இவ்விஷயம் பற்றிய பல சந்தேகங்களும் தப்பு அபிப்பிராயங்களும் நீங்கும்

இரண்டு நிலையங்களிலும் பல உயர்தரக் கச்சேரிகள் சென்ற வாரத்தில் அமைந்தன. அவற்றில் சிகரமாக வாய்ந்தது 7உ திருச்சியில் நடந்த சாத்தூர் சுப்பிரமணியத்தின் கச்சேரி. அவரது சாரீரம் அன்று குறிப்பிடத் தக்க சுருதி சுத்தமும், மதுரமும், கனமும் கொண்டு, பாடியதை யெல்லாம் வெகு சுகமாய்ச் செய்தது. கல்யாணி, கேதாரகௌளை ராகங்கள் கற்பனைச் சித்திரப் பெருக்குடனும், பாணி வழுக்குடனும் விளங்கின. 'காமாம்பாம் பஜரே' கிருதியின் ஸ்வரப்ரஸ்தாரமும், கேதாரகௌளை பல்லவியும் விருவிருப்பா யிருந்தன.

3உ அவருடன் அமைந்திருந்தோர் கச்சேரியை அகாலமாய் இரவு 9-40க்குத் தள்ளிப் போட்டிருந்ததைப் பற்றி முதலில் சென்னை நிலையத்தாரிடம் சிறிது கோபம் கொண்டேன். அக் கச்சேரியினால் எழுந்த உள்ள மகிழ்ச்சியில் பிறகு அதை மறந்தேன். பாடியவர் சுசீலா அச்சுதராமன். இப்பெண்மணியின் குரல் குறிப்பிடத்தக்க மதுரமும், இயற்கையான கன நய நாஸுக்கும், சுருதி சுத்தமும் கொண்டிருந்தது. அத்துடன் பிரத்யேக பாணி வளப்பு, சஞ்சார சங்கதிகளின் கோவை யழகு, கார்வைக் குளிர்ச்சி, சாகித்யத் தெளிவு ஆகியவையும் ஒருங்கே சேர்ந்தன. 'ராஜு வெடல' கிருதியில் நிரவல் ஸ்வரங்களின் விருவிருப்பும் பாவமும் நிச்சய ஞானச் சிறப்பையும் சாதக எழிலையும் எடுத்துக் காட்டின. கோமளவல்லியின் வயலினும் ரமணி ஜயந்தியின் மிருதங்கமும் நன்கு போஷணை கொடுக்கும் பக்க வாத்யங்களாய் அமைந்ததோடு, எல்லாம் ஸ்திரீகளின் கோஷ்டியான கச்சேரியாக வாய்த்தது.



சுசீலா அச்சுதராமன்

2உ திருச்சியிலிருந்து கேட்ட மாயவரம் கோவிந்தராஜ பிள்ளையின் வயலின் கச்சேரி சிறப்பா யிருந்தது. அவரது தோடியும் சுத்த பங்காள, பூர்விகல்யாணி, கல்யாணி ராகங்களும் தரமாயிருந்தன. அவருடன் சேர்ந்து வயலின் வாசித்த கும்பகோணம் சம்பந்தம் பிள்ளையின் திறமையும் பாராட்டத்தக்கது.

5உ சென்னையில் குன்னக்குடி வெங்கடராமய்யர் அநாயாச உதவுபடியுடனும் அவருக்கு இயல்பான தனிமங்களுடனும் மூன்று நேரக் கச்சேரி ஜமாய்த்தார். சாருகேசி, ஹிந்தோளம், சஹநாட்டை ராகங்களும் உருப்படிகளும் வளப்பாயிருந்தன. இடையிடங்களில் மிருதங்கம் கஞ்சிரா வாத்யங்களின் நாதம் மிகைப்பட்டுக் கேட்டது.

6உ சென்னையில் பாடிய நாகர்கோவில் ஹரிஹரனின் கானம் உயர்ந்த ரக வகைகளில் ஒன்று. நல்ல உதவுபடியுடன் விஸ்தாரமாய் வழங்கிய பைரவி, கல்யாணி ராகங்களிலும் 'யாரோ இவர் யாரோ' உருப்படியின் நிரவல் ஸ்வரங்களிலும் ஞானச் சிறப்பை விளக்கினார்.

* * *

திருச்சியில் 2உ, 3உ விஜயராகவலு நாயுடுவின் பாட்டு தரமா யிருந்தது. சுகபாவத்துடன் பொழிந்த ராகங்களில் ரீதிகௌளையும் கரஹரப்ரியாவும் சிறப்பாயிருந்தன.

4உ சென்னையில் செங்கோட்டை கங்காதரம், டி. என். இராஜாராஜன் இவர்கள் பாட்டும், வி. கே. வெங்கடராமானுஜத்தின் வயலினும் குறிப்பிடத் தக்கவை.

5உ திருச்சியில் திருவெண்காடு செல்வரத்னம் பிள்ளை நடுத்தரக் குரலில் நல்ல விருவிருப்புடன் பாடிய காமவர்த்தினி, கரஹரப்ரியா, கல்யாணி ராகங்களும் உருப்படிகளும் தேர்ந்தியா யிருந்தன.

மகாத்மாவைத் தந்தவர்

இன்றைய தினம் காந்தி மகான் நாற்பது கோடி இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவராக விளங்குகிறார். அந்த மகானின் அஹிம்சாதர்ம சத்தியாக்கிரஹ இயக்கத்தின் மூலமாக இந்தியா சுதந்திரத்தின் வாசற்படியை அடைந்து உலகத்திலுள்ள மற்றச் சுதந்திர வல்லரசுகளுடன் சமத்துவ ஸ்தானம் வகிக்கிறது. மகாத்மாவும் அவருடைய சத்தியாக்கிரஹ மார்க்கமும் இத்தகைய மகோந்நத பதவியை அடைவதற்குக் காரணபூதமானவர், வழி செப்பனிட்டுக் கொடுத்தவர், அஸ்திவாரம் அமைத்தவர் யார் தெரியுமா? இதோ வீற்றிருக்கும் பீஹார் மாகாணத்தின் முடிசூடா மன்னர் பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்கள் தான்.

தென்னாப்பிரிக்கா போராட்டத்தை ஒருவாறு வெற்றிகரமாக முடித்துக்கொண்டு காந்தி மகான் சரியாக முப்பது வருஷங்களுக்கு முன்னால் இந்திய தேசத்துக்கு வந்தார். அப்போது அவரை "மகாத்மா காந்தி" என்று அறிந்தவர்கள் இந்நாட்டில் அதிகம்பேர் இல்லை. "மிஸ்டர் கந்தி" என்றே பெரும்பாலோர் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமையில், பீஹார் மாகாணத்தில் சம்பாரன் பிரதேசத்திலிருந்த அவுரித் தோட்டங்களில் ஏழை இந்தியத் தொழிலாளிகள் சொல்லொணாத கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை பாபு ராஜேந்திரர் அறிந்திருந்தார். மேற்படி அவுரித் தோட்டங்கள் வெள்ளைக்கார முதலாளிகளுக்குச் சொந்தமாகையால் அந்தத் தோட்டத் தொழிலாளிகளின் கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேட யாராலும் முடியவில்லை; யாரும் முன்வரவும் இல்லை. அப்படி நிர்க்கதியாயிருந்த தொழிலாளிகளைக் காப்பாற்ற ஸ்ரீ மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை பாபு ராஜேந்திரர் அழைத்தார். காந்திஜியும் விரைந்து சென்றார். விரைந்து சென்றவர் வந்தது போலவே திரும்பி விரைந்து செல்ல வேண்டுமென்று சம்பாரன் கலெக்டர் துரை 144-வது பிரிவின்படி உத்தரவு போட்டார். இதனால் பிரசித்தி யடைந்த மேற்படி 144-வது பிரிவு, அந்த உத்தரவை மீறப்போவதாகக் காந்திஜி சொன்னதும் இன்னும் மகத்தான பிரசித்தி யடைந்தது. உத்தரவு வாபஸ் ஆயிற்று. சம்பாரன் விசாரணை நடந்தது; நரக வாழ்வு நடத்திவந்த அவுரித் தொழிலாளருக்குக் கதிமோட்சம் பிறந்தது.



பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எஃகுச் சட்டமான இந்திய அதிகாரவர்க்கத்தை எதிர்த்து மகாத்மா அன்று ஆரம்பித்த சாத்விகப் போர்தான் நானது 1946-ம் வருஷத்தில் இவ்வளவு மகத்தான வெற்றியைக் கண்டிருக்கிறது.

இவ்வளவுக்கும் காரண புருஷரான பாபு ராஜேந்திரர் அன்றுபோலவே இன்றும் மகாத்மாவின் பிரதம சிஷ்யராக இருந்து வருகிறார். பசுவை யொத்த சாது சுபாவமும், இரும்பை யொத்த வலிய நெஞ்சமும் படைத்த அந்தத் தலைவர் முதலாவது இந்திய தேசிய சர்க்காரின் உணவு மந்திரி பதவி ஏற்றபோது பஞ்சத்தினடிபட்ட மக்கள்கூட முழு வயிறு நிறைந்தது போன்ற திருப்தி யடைந்தார்கள். அதற்கேற்ப பாபு ராஜேந்திரரும் சென்னை மாகாணத்தாரிடம் விசேஷ அபிமானம் கொண்டு அரிசிப் பஞ்சத்தைத் தீர்க்கக் கூடுமான முயற்சி யெல்லாம் செய்து வந்தார். அவரே நேரில் வந்து இவ்விடத்து நிலைமையைப் பார்த்து வேண்டியன செய்யவும் சம்மதித்திருந்தார். இந்த வாரத்தில் அப் பெரியார் சென்னை மாகாணத்துக்கு விஜயம் செய்வதாக ஏற்பாடாகி யிருந்தது. மிக முக்கியமான அரசியல் காரணங்களினால் அவருடைய பிரயாணம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

பாபு ராஜேந்திரர் இந்த வாரத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யாததினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் ஓரளவேனும் நிவர்த்தியாகுமாறு நமது இந்த இதழ் அட்டை அந்தத் தலைவரின் திருவுருவத்தைத் தாங்கிக்கொண்டு வெளியாகிறது.

★ தீபாவளி மலர் ★

நேயர்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறோம். தீபாவளி மலருக்காக இனிமேல் நமது காரியாலயத்துக்கு நேரில் மணியார்டர் அல்லது செக் அல்லது போஸ்டல் ஆர்டர் எதுவும் அனுப்ப வேண்டாம். ஆங்காங்குள்ள ஏஜெண்டுகளிடம் பதிவு செய்து கொள்ளக் கோருகிறோம்.

அக்டோபர் 7-உக்குப் பிறகு நமது காரியாலயத்துக்கு வந்த ஆர்க் [illegible] மணியார்டர்களைத் திருப்பி அனுப்ப நேர்ந்தது. மேற்படி [illegible] நேர்ந்த மன்னிப்புக் கோருகிறோம்.

மானேஜர்: "கல்கி", சென்னை

வண்டிக்காரன்


ஆ. வி. ராகவன்

"ஹை! ஹை! ஹை! ஏ, ஐயா! எட்டிப் போய்யா!" என்று தன் குதிரை வண்டியைக் கட கட வென்று ஓட்டிக் கொண்டு போனான் வண்டிக்காரன். அவனுடைய தகப்பனார் அவனுக்கு விட்டுப்போன ஆஸ்தி ஒரு ஓட்டைக் குடிசையும், எலும்புக் தோலு மாக இருந்த ஒரு குதிரையும், ஒரு பழைய வண்டியுந்தான்.

வீட்டிலே அவன் மனைவி, ஒரு வயதுக் குழந்தை — இதுதான் அவன் குடும்பம். அவளுக்கு உலகம் அவன் குழந்தையும், பாத்திரங்கள் கழுவிக் கொடுக்கும் சில வீடுகளுந்தான்! அவன் இரவில் வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது அவள் தூங்கிக் கொண்டிருப்பாள். பக்கத்தில் குழந்தை படுத்திருக்கும். வண்டி விளக்கின் வெளிச்சத்தில் அவன் அவர்களைப் பார்ப்பான். பிறகு தானும் படுத்துக் கொள்வான். பொழுது விடிந்ததும் தன் ஓட்டை வண்டியுடன் ஊரைச் சுற்றி வரப் போய் விடுவான். இதுதான் அவர்களுடைய தினசரி வாழ்க்கை.

ஒருநாள் இரவு நெடுநேரம் ஆகி விட்டது. அவன் வீட்டிற்கு வந்து படுத்து ஒரு தூக்கமும் தூங்கிவிட்டான். திடீரென்று வானம் இருண்டது. மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. அவன் வீடெல்லாம் தாரை தாரையாக ஒழுகிற்று. மழைநீர் மேலே படவே அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவளும் எழுந்து குழந்தையை எடுத்துக்கொண்டு ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவர் வந்து அவனைக் கூப்பிட்டார். "பக்கத்து ஊரில் ஒரு காரியம்; அவசரமாகப் போக வேண்டி இருக்கிறது!" என்றார் அவர். இந்த மாதிரிச் சமயத்தில் தான் அவன் ஏதாவது சம்பாதிக்க முடியும். ஆகையால் "வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, மழையோடு மழையாகக் குதிரையை வண்டியில் பூட்டினான்.



பக்கத்து ஊர் என்பது ஐந்து மைல் தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு கிராமம். கொஞ்ச தூரம்தான் ரோடு. அப்புறம் காட்டுப் பாதை. மழை பெய்து வெள்ளம் வந்து பாதையெல்லாம் அறுந்து போய் மேடும் பள்ளமுமாக இருந்தது. நடுநிசியில் இந்த அழகான பாதையில் வண்டி தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருந்தது. எப்படியோ ஊரில் கொண்டு போய் அவரை இறக்கிவிட்டு வாடகையை வாங்கிக் கொண்டான். இரவில் அங்கேயே தங்கி விட்டு விடிந்தபின் திரும்பிப் போகலாம் என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அவனுக்கு இஷ்டமில்லை. "வீட்டில் அவள் குழந்தையுடன் தனியாக இருப்பாள். எப்படியாவது போய் விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வண்டியைத் திருப்பினான்.

அப்பொழுது மழையும் சிறிது நின்றிருந்தது. அந்தக் காட்டுப் பாதையில் குதிரையால் வண்டியை இழுக்க முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டது. மெதுவாகத் தட்டிக் கொடுத்து ரோடிற்குக் கொண்டு வந்து விட்டான். பிறகு குதிரையை ஓரே தூரத்தாகத் தூரத்திக் கொண்டுவந்தான். வீட்டருகில் வந்ததும் திடீரென்று குதிரை கால் இடறிக் கீழே விழுந்தது. அவ்வளவுதான்; ஒரு நீண்ட பெரு மூச்சுக்குப் பிறகு, அந்த இடத்திலேயே குதிரையின் உயிர் போயே போய் விட்டது!

★

இரண்டு நாட்கள் சென்றன. கையிலிருந்த காசெல்லாம் தீர்ந்து விட்டது. கஞ்சிக்கு வேறு வழி இல்லை. சும்மா இருக்கும் அந்த வண்டியை விற்று விடுவதென்று தீர்மானித்தான். அவனைவிடச் சற்று நல்ல நிலையில் உள்ள அவனுடைய நண்பர்களில் ஒருவன் ரொம்ப ரொம்பப் பரி

தாபப்பட்டு எழுபது ரூபாய் மதிப்புள்ள அந்த வண்டியை முப்பத்தைந்து ரூபாய்க்கு வாங்கிக் கொண்டான்!

அந்த முப்பத்தைந்து ரூபாயையும் எடுத்துக்கொண்டு நேரே கடை வீதிக்குச் சென்றான் வண்டிக்காரன். தன் மனைவிக்கு ஒரு புடவையும் குழந்தைக்கு ஒரு சொக்காயும் தனக்கு ஒரு துண்டும் வாங்கிக் கொண்டான். அத்துடன் குழந்தைக்கு இரண்டு பித்தளைக் காப்பும் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். அந்தச் சின்னஞ் சிறு குழந்தைக்குச் சொக்காயை மாட்டிப் பித்தளைக் காப்பைப் போட்டதும் எப்படி இருந்ததோ தெரியவில்லை: ஒரே ஆனந்தம் அதற்கு! தன் தகப்பனைப் பார்த்துப் பார்த்துச் சட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு சிரித்தது.

கையிலிருந்த பணம் கரைந்ததும் அவன் பாடு மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது. எப்படியோ சிரமப்பட்டுத் தினசரி இரண்டணா மூன்றணா வீட்டிற்குக் கொண்டு வருவான். குதிரை இருந்தவரை அவனுக்குக் குழந்தையின் அருமை அவ்வளவாகத் தெரியவில்லை. இப்பொழுது குழந்தைதான் அவனுக்கு உலகம். அவன் சம்பாதிக்கும் அந்தச் சொற்பப் பணத்திலும் குழந்தைக்குத் தினசரி ஏதாவது வாங்கிக்கொண்டு வருவான். மலர்ந்த முகத்துடன் அது சாப்பிடும் அழகிலே, அவன் தன் பசியையே மறந்துவிடுவான்!

ஒரு நாள் மாலை வழக்கம்போல் ஏதோ வாங்கிக் கொண்டு வந்து குழந்தையிடம் கொடுத்தான் வண்டிக்காரன். ஆனால் குழந்தை அதைச் சாப்பிடவில்லை; பார்த்து விட்டுப் பேசாமல் வைத்து விட்டது. அதன் முகத்திலும் சிரிப்பே இல்லை! அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வெளியே தூக்கிக் கொண்டு வந்து என்னவெல்லாமோ அழகு காட்டினான். அப்பொழுதும் குழந்தை சிரிக்கவில்லை; அழ ஆரம்பித்தது. பேசாமல் கொண்டு போய் வீட்டில் படுக்க வைத்து விட்டான்.

இரவிலும் அது சாப்பிடவில்லை. ஆடாமல் அசையாமல் அப்படியே படுத்துக் கொண்டிருந்தது. உடம்பைத் தொட்டுப் பார்த்தான்; சுடவில்லை. "கடவுள் விட்ட வழி!" என்று காலையில் எழுந்ததும் வெளியே போய்விட்டான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவன் மனைவி தன் கணவன் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு ஓடி வந்தாள். "குழந்தை ஒரு மாதிரியாக இருக்கிறது. வந்து பாருங்கள்!" என்று அவனைக் கூப்பிட்டாள். அவன் பரபரப்புடன் எழுந்து ஓடி வந்தான். குழந்தை அவனைப் பார்த்தது. ஆனால் சிரிக்கவுமில்லை; அழவுமில்லை.

ஒன்றும் புரியாமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு டாக்டர் வீட்டுக்குச் சென்றான். டாக்டர் குழந்தையை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "ஊசி போட்டால் சரியாய்ப் போய்விடும். இரண்டு ஊசி போட வேண்டும். ஊசி ஒன்றுக்கு ஐந்து ரூபாயாகும்!" என்றார்.



அவன் கையில் அந்தச் சமயத்தில் இருந்த தொகை மொத்தம் ஒன்னேமுக்காலணாதான்! பத்து ரூபாய்க்கு அவன் எங்கே போவான்? டாக்டர் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான். எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று அழுதான். அவர், "நான் என்ன செய்யட்டும்? மருந்து நானா செய்கிறேன்? பணம் போட்டுத்தானே வாங்க வேண்டும்?" என்று சொல்லி அவனைப் போகச் சொல்லி விட்டார்.

இரவு வந்தது. குழந்தையை உயிருடன் பார்க்க வேண்டுமானால் திருடுவதைத் தவிர அவனால் வேறு எதுவும் செய்ய முடியாது. ஆகவே, மெள்ள எழுந்து வெளியே வந்தான். வக்கீல் முருகேசம் பிள்ளையின் வீட்டுக் கொல்லைப் பக்கத்திலிருந்த கதவு திறந்திருந்தது.

தட்டுத் தடுமாறித் தடவிக் கொண்டே வீட்டிற்குள் சென்றான். அவன் வருவான் என்று தானோ என்னமோ எல்லா அறைகளும் நன்றாகப் பூட்டப் பட்டிருந்தன. கடைசியில் ஓர் அறையில் மங்கலாக வெளிச்சம் தெரிந்தது. கட்டிலில் முருகேசம் பிள்ளை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். இன்னொரு கட்டிலில் அவர் மனைவியும் குழந்தையும் படுத்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அணிந்திருந்த நகைகளை ஒருமுறை உற்றுப் பார்த்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். பேசாமல் வீட்டிற்குப் போய்விடலாமென்று வெளியே வந்தான். வரும் வழியில் ஏதோ தடுக்கிக் கீழே விழுந்தான். விழுந்தவன் எழுவதற்குள் ஏதோ சத்தம் கேட்டது. அவன் தடுக்கி விழுந்தது வேறொன்றுமில்லை; அந்த வீட்டு வேலைக்காரன்தான். அவன் உளறியடித்துக் கொண்டு எழுந்ததும் வண்டிக்காரன் ஓட ஆரம்பித்தான். அதற்குள் எங்கிருந்தோ இரண்டு பேர் வந்து அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அவ்வளவுதான்; நாலாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைப்பெட்டியைத் தூக்கிச் சென்றதாகவும், பிடிக்கப்போன ஆட்களில் ஒருவனைப் பலமாகத் தாக்கி அவன் உயிருக்கே ஆபத்து ஏற்படும்படிச் செய்ததாகவும் அவன் பேரில் 'ரிபோர்ட்' செய்யப்பட்டது. போலீஸார் அவனை லாக்-அப்பில் அடைத்துத் தங்கள் மனம் போனபடி கையப் புடைத்தனர்.



அடுத்த சில தினங்களுக்கெல்லாம் வழக்கு விசாரணைக்கு வந்தது. வண்டிக்காரனுக்கு ஒன்பது வருடங்கள் சிறைவாசம் கிடைத்தது.

★

அன்று இரவு பூராவும் தன் கணவனை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள் வண்டிக்காரனின் மனைவி. பொழுது விடிந்த பின்புதான் அவன் திருடிவிட்டு அகப்பட்டுக் கொண்ட விஷயம் அவளுக்குத் தெரிந்தது. அவனைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அவள் துடித்தாள். ஆனால் அதைவிட அவசரமாகக் குழந்தையைக் கவனிக்க வேண்டியிருந்தது. அதைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வீடு வீடாகப் போய் அழுதாள். மிராசுதார் கலியாணசுந்தரம் அவளுடைய நிலையைக் கண்டு இரங்கினார். அவருக்கும் அப்படித்தான் ஒரே ஒரு குழந்தை இருந்தது. சமீபத்தில் இறந்து போய் விட்டது. அந்த ஏக்கத்தின் காரணமாக அவர் உடனே அவளை டாக்டரிடம் கூட்டிச் சென்றார். குழந்தையும் பிழைத்தது. அவளையும் தம்மிடமே வேலைக்கு வைத்துக் கொண்டார். ஒரு சமயம் சிறையிலிருந்த தன் கணவனைப் பார்க்கப் போனாள் அவள். ஏனோ சிறை அதிகாரிகள் அவனைப் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டனர்!

கலியாணசுந்தரத்திற்கு அந்தக் குழந்தை இறந்து போன தம் குழந்தையைப் போலவே தோன்றிற்று. அவர் குழந்தையிடம் மிகவும் பிரியமாக இருந்தார். அதற்குச் சட்டை தைத்துக் கொடுத்தார்; பொம்மை வாங்கிக்கொடுத்தார். சில சமயம் அதைத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு சாதம் ஊட்டினார். இந்த அடாத செயலைக் கண்டுதானோ என்னமோ அவர் மனைவி காலமாகி விட்டாள்.

மனைவி இறந்ததும் அவர் மனமும் மாறி விட்டது. நிலபுலன்களையெல்லாம் விற்று விட்டு வேறிடத்திற்குப் போகத் தயாரானார். தம் வேலைக்காரியைக் கூப்பிட்டு, "இதோ பார், எனக்குக் குழந்தை இல்லை, குட்டி இல்லை. நான் வேறு கல்யாணமும் செய்துகொள்ளப் போவதில்லை. எனக்கு உன் குழந்தையைத் தவிர ஆறுதலுக்கு வேறு யாருமில்லை. இவ்வளவு சொத்து, சுகங்களும் வீணாகத்தான் போகப் போகின்றன. உன் குழந்தையை எனக்கு வாரிசாகக் கொடுத்துவிடு. நீயும் என்னுடன் வா!

அதற்கும் வண்டி!



"எனப்பா, அந்தக் 'க்யூ' கோடிக்குப் போக என்ன கேட்கிறே?"
"எம்மாந் தூரம் இருக்குது! எட்டணாவாச்சும் கொடுங்க, சாமி!"

ஆனால் அங்கே வந்து, 'நான்தான் குழந்தையின் அம்மா!' என்று பாத்தியம் கொண்டாடக் கூடாது!" என்றார்.

அந்தக் குழந்தையை அருமையாகப் பெற்று எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் அன்பாக வளர்த்தவன் அவன்; கஞ்சி இல்லாமல் துடிக்கும் பொழுதும், காசு இல்லாமல் தவிக்கும் பொழுதும், அந்தக் குழந்தையின் மாசற்ற புன்னகையில் தன் இதயத்தைப் பறிகொடுத்துச் சிறிதளவாவது கவலையற்றிருந்தவன் அவன்; கொடுமையும் வஞ்சகமும் கோரத்தாண்டவம் புரியும் இந்த உலகத்தில் — அநியாயமும் அக்கிரமமும் யதேச்சாதிகாரம் செலுத்தும் இந்த உலகத்தில்—வறுமையும் பிணியும் சுழன்று சுழன்று வீசி மக்களை அலைக்கழிக்கும் இந்த உலகத்தில்—எங்கோ ஒரு மூலையில் இருந்த குடிசையில் கிழிந்த பாயின்மீது கிடந்த தன் குழந்தையின் கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்களைக் கண்டு களித்துக் கொண்டிருந்தவன் அவன்! அதை விட்டுப் பிரிந்து அநாதை போல வாழ வேண்டுமே என்று நினைத்த பொழுது அவனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. "முடியாது! முடியாது!! அவன் எவ்வளவு பெரிய சீமானாக வருவதாயிருந்தாலும் நான்தான் அவனுக்குத் தாய்! அப்படி இல்லாவிட்டால் அவன் ஏழையாகவே இருந்து விட்டுப் போகட்டும்!" என்று கத்த வேண்டும்போல் அவனுக்குத் தோன்றிற்று. குழந்தையை இறுகத் தழுவி மார்பில் அணைத்துக் கொண்டு விசித்து விசித்து அழுதான்.

சிறிது நேரங் கழித்து அவனாகவே யோசித்தான். "நாமோ ஏழை! குழந்தைக்கு வயிறு நிறையப் பால் வாங்கிக் கொடுக்கக் கூட நம்மால் முடியவில்லை. உடம்புக்கு ஏதாவது வந்தால் காப்பாற்றுவதற்குச் சக்தி இல்லை. முன்பு கூட அவர்தானே காப்பாற்றினார்? ஒரு பயனுமில்லாமல் நான் ஏன் அதற்குத் தாயாக இருக்க வேண்டும்?" என்று எண்ணினான். கடைசியில் எப்படியோ தாய்மையின் இன்பத்தை அவனைப் பிடித்திருந்த வறுமை அவனிடமிருந்து தட்டிப் பறித்துக்கொண்டு விட்டது!

"நீ கொஞ்ச நாளைக்கு இங்கேயே இரு. நான் வேறு யாரையாவது அழைத்துச் செல்லுகிறேன். குழந்தை உன்னை

மறந்து விட்டது என்று தெரிந்தால் மறுபடியும் உன்னை அழைத்துச் செல்கிறேன்!'' என்று சொல்லி விட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடந்தார் அவர். வெகு நேரம் வரையில் அவர் போன திசையையே பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

★

ஒன்பது வருடங்கள் சென்றன. வண்டிக்காரன் விடுதலையடைந்தான். ஊரே புதிதாக இருந்தது அவனுக்கு! "வீட்டில் மனைவி எப்படி இருக்கிறாளோ? குழந்தை என்ன ஆயிற்றோ?" என்று அவசர அவசரமாக அவன் ஓடி வரவில்லை. நிதானமாக ஒவ்வொரு இடத்திலும் நின்று சுற்றிலும் பார்த்துக் கொண்டு மெதுவாக வந்தான். கடைத் தெருவில் ஒருவன் இரண்டு குருவிகளைக் கூண்டில் அடைத்து வைத்துக்கொண்டு பக்ஷி சாஸ்திரம் சொல்லிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் வண்டிக்காரனுக்கு எப்படி இருந்ததோ தெரியவில்லை; அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்து, கூட்டைப் பிடுங்கிக் கதவைத் திறந்து குருவிகளைப் பறக்கவிட்டான். அவை பறந்து செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டே மெதுவாக நடந்து வந்தான்.

அநேகருக்கு அவனை அடையாளமே தெரியவில்லை. அடர்ந்து வளர்ந்திருந்த தாடியும் மீசையும் அவனைப் பிறருக்குத் தெரியாமல் மறைத்து விட்டன. அடையாளந் தெரிந்து கொண்ட சிலரும் அவனிடம் பேசவில்லை. நேராக வீட்டிற்குச் சென்றான். வீட்டையே காணோம்! வீடு இடிந்துபோய்க் குட்டிச் சுவராக இருந்தது! பக்கத்திலிருந்த யாரையும் எதுவும் அவன் கேட்கவில்லை. குழந்தை இறந்து போயிருக்கும். அத்துடன் தான் சிறைக்குச் சென்றுவிடவே அவன் மனம் நொந்து அதே வியாதியாய் இறந்து போயிருப்பாள் என்று நினைத்துக் கொண்டான்.

அப்பொழுது சிலோனுக்கு ஏராளமான கூலி ஆட்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்களுடன் வண்டிக்காரனும் கலந்து கொண்டான். சிறையில் அனுபவித்த துன்பங்களைவிட அவன் சிலோனில் அதிகமாக அனுபவிக்கவில்லை. அங்கே வேலை சிறிது கஷ்டமாக இருந்தாலும் கூலி நிறையக் கிடைத்தது.

பத்து வருடங்கள் சென்றன. கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு தன்

ஊருக்கே வந்து சேர்ந்தான். முன்பு இருந்த இடத்திலேயே ஒரு சின்ன வீடு கட்டிக் கொண்டான். அழகான குதிரை வண்டி ஒன்றும் வாங்கிக் கொண்டான்.

ஒருநாள் அவன் வண்டியைப் பாதையோரத்தில் நிறுத்திக்கொண்டு, ஆட்களுக்காகக் காத்திருந்தான். அப்பொழுது ஒரு வாலிபன், "ஏ, ஜட்கா! இங்கே வா!" என்றான்.

"எங்கே சாமி போகணும்?"

"மருதூர் வரை!"

"சரி, ஏறுங்க!"

"எவ்வளவு கேட்கிறே?"

"ஒரு ரூபா கொடுங்க!"

"ஒரு ரூபாயா! நீ போ, நான் வேறே ஆளைப் பார்த்துக் கொள்கிறேன்!"

"எல்லா வண்டிக்காரனும் அப்படித்தான் கேட்பான், சாமி! ஏறுங்க, போகலாம்!"

அவன் சிறிது யோசித்தான். பிறகு ஏறிக் கொண்டான். வண்டி வேகமாகச் சென்றது. மருதூர் மிராசுதார் வீட்டையடைந்ததும் ஜட்காவை நிறுத்தச் சொல்லி வாடகை கொடுத்து விட்டு, வண்டியை விட்டு இறங்கினான் வாலிபன். அப்பொழுது அந்த வீட்டிலிருந்து ஒரு வயதான வேலைக்காரி வெளியே வந்தாள். அவளைப் பார்த்ததும் வண்டிக்காரன் பிரமித்துப் போனான்!

"அவளா இவள்! அவள் இறந்து போகவில்லையா!" என்றெல்லாம் எண்ணினான். அதற்குள் 'ஓ'வென்று கதறிக் கொண்டு அவள் ஓடி வந்து அவன் காலடியில் விழுந்து அழுதாள்; அவனும் அழுதான்! அந்தச் சமயத்தில் மிராசுதார் கலியாணசுந்தரம் வெளியே வந்தார். வண்டிக்காரனைக் கண்டதும் அவர் முதலில் திடுக்கிட்டுப் போனாராயினும், தம் ஆச்சரியத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு சந்தோஷமாக அவனிடம் பேசக் கொடுத்தார். எல்லா விஷயத்தையும் அவனிடம் சொன்னார். அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. "வண்டியில் வந்தவர் என் மகனா!" என்றான்.

"ஆமாம்" என்றார் அவர்.

சிறிது நேரம் எல்லோரும் மௌனமாக நின்றார்கள்.

"நான் வீட்டிற்குப் போகிறேனுங்க!" என்றான் அவன் மிராசுதாரிடம்.

"அவளிடமும் சொல்லி விட்டுப் போ!" என்றார் அவர்.

உடனே அவன் தன் பிள்ளை இருந்த பக்கம் திரும்பி, "சாமி! போய் வரேனுங்க; அடிக்கடி வருகிறேன்!" என்று சொல்லி விட்டுக் கண்ணீரும் கம்பலையுமுடன் திரும்பினான். அடுத்த நிமிஷம் வண்டி மருதூரை விட்டுப் புறப்பட்டு விட்டது.

மறு நாள் வண்டிக்காரன் இளைய மிராசுதாரான தன் மகனைக் கடைத் தெருவில் கண்டான். கண்டதும், "என் வண்டியிலே ஏறுங்க, சாமி! என் வண்டியிலே ஏறுங்க!" என்று கத்திக் கொண்டே அவனை நெருங்கினான்.

"வாடகை எவ்வளவு கேட்கிறே?" என்று கேட்டான் அவன்.

"கொடுக்கிறதைக் கொடுங்க, சாமி!" என்று சொல்லி அவனை அவசர அவசரமாக வண்டியில் ஏற்றிக் கொண்டான்.

"ஹை! ஹை! ஹை! ஏ, ஐயா! எட்டிப் போய்யா!" என்று வழக்கம் போல் வண்டியைக் கடகட வென்று ஓட்டிக் கொண்டு போனான். அவன் குரலில் அப்போது பெருமிதமும் எக்களிப்பும் தொனித்தன.



★

அவலட்சணம்!

"ஐயையோ! என்ன இது? இரண்டு வருஷமா அலைஞ்சு இப்பத்தான் அருமையா ஒரு வீடு கிடைச்சிருக்கு; அதை இப்படிச் செய்யறீங்களே!"

"என்னத்தைச் செய்யறேன்? இந்தப் படத்தை மாட்ட ஆணி அடிச்சுண்டிருந்தா அவலட்சணம் மாதிரி கத்தறியே!"

★

கம்பர் தரும் காட்சி

156. நாளை நீயே காண்பாய்!

டி.கே.சி.

சூர்ப்பனகைக்கு நேர்ந்த அவமானம் தனக்கும் தன் சாம்ராஜ்யத்திற்குமே நேர்ந்ததென்று எண்ணுகிறான் ராவணன். அவமானம் தாங்க முடியவில்லை; கோபமும் ஒரே முட்டாய் முட்டுகிறது. துணை யாருமே இல்லை என்பது போலத் தோன்றுகிறது.

"நானும் உயிரோடு இருக்கிறேனே! எங்கும் இல்லாத பெரும் பழி என் தலைக்கு வந்திருக்கிறது. அதைத் தாங்குவதற்காகத்தான் பத்துத் தலையும் போதாக் குறைக்கு இருபது கையும் இருக்கின்றனவே!" என்பதாக உள்ளம் வெதும்பிப் புலம்புகிறான். மனக்கசப்பில் சிரிக்கவும் செய்கிறான். கண்ணில் பொறி பறக்க ஒரே விழிப்பாய் விழிக்கிறான். சிறிது நேரங் கழித்து ஒரு வகையாக மனத் தெளிவு வந்தது.

"இந்த இரண்டு மனிதர்களுக்கும் துணைதான் கிடையாதே; அப்படியே அவர்களை வாளால் கொன்று விடலாமே! கரன் முதலான அரக்கர் ஏன் அப்படிச் செய்யவில்லை?" என்று கேட்கிறான்.

என்று ரைசெ யா,ந கைசெ
யா,எ ரிவி ழிப் பான்,—
'வன்து ணைஇ லாஇ ருவர்
மாணு டரை வா ளால்க்
கொன்றி லர்கொ லாம்,நெ டிய
குன்று டைய கா னில்
நின்ற கர னேமு தலி—
னோர்நி ருதர்' என் றான்.

[என்று உரை செய்யா : என்று பேசியவனாய்; நகை செயா : சிரித்தவனாய்; எரி விழிப்பான் : அக்கினியை வீசுவதுபோல் விழிக்கிறான் : வன்துணை இலா இருவர் மானுடரை : பலம் உள்ள துணை ஒன்றும் இல்லாத அந்த இரண்டு மனிதர்களையும்; வாளால் கொன்றிலர் கொலாம் : வாளினால் கொன்று விட வில்லையோ; நெடிய குன்றுடைய கானில் : மகா பருவதத்தில் பெரிய பெரிய மரங்கள் நிமிர்ந்து நிற்பதுபோல் : நின்ற கரனே முதலினோர் நிருதர் : நின்ற கரன் முதலான அரக்கர்கள்.]

அந்த மானிடரைக் கரன் முதலியோர் கொன்றுவிட வில்லையா என்று கேட்டதற்கு, "அந்தலை அரக்கர்களும் ராமனது அம்பால் இறந்தொழிந்து போனார்கள். நான் ஒருத்திதான் மிச்சம்!" என்றாள். இதைக் கேட்டதும் ஒன்றும் ஓடவில்லை ராவணனுக்கு. "அரக்கர் பாடு இப்படியா ஆகிவிட்டது? சரி, போகட்டும். உன்னை இப்படி அவமானப் படுத்தியதற்கு என்ன குற்றம் செய்தாய்?" என்று ராவணன் கேட்டான். "என்னுடைய குற்றத்தைக் கேள்" என்று சொல்ல ஆரம்பிக்கிறாள் சூர்ப்பனகை.

"அந்த ராமனோடு லக்ஷ்மிதேவி மாதிரி ஒரு பெண் வந்திருக்கிறாள். அவள் பொருட்டு ஏற்பட்டதுதான் என் பொல்லாப்பு!" என்று சொல்லுகிறாள்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

என்வயின் உற்றகுற் றம்,
யாவர்க்கும் எழுதொணா த
தன்மையள் இராமனோ டும்
தாமரை தவிரப்போந் தாள்
மின்வயின் மருங்குகொண் டாள்
வேய்வயின் மென்தோள்கொண்
டாள்
பொன்வயின் மேனிகொண் டாள்
பொருட்டினால் புகுந்த(து)
என் றாள்.

[என் வயின் உற்ற குற்றம் : என்னிடத்தில் உண்டான குற்றமாவது; யாவர்க்கும் எழுதொணாத தன்மையள் : ஒருவருடைய அழகைச் சித்திரத்தில் அழுத்தம் கொடுத்து எழுத முடியும்! ஆனால் ராமனுடைய அழகோ வரம்பெல்லாம் கடந்து இருப்பதால் சித்திரத்தில் எடுத்துக் காட்ட முடியாது; தாமரை தவிரப் போந்தாள் : செந்தாமரையை விட்டு இங்கே வந்தவள், — அழகில் லக்ஷ்மியே என்று சொல்ல வேண்டும்; மின்வயின் மருங்கு கொண்டாள் : இடை வேணுமே, அதை மின்னலிடமிருந்து பெற்றுக் கொண்டாள்; அது போலவே தோளை வேயிலிருந்து கொண்டாள். வேய் : சர்க்கழி; மேனி, பொன்னிலிருந்து கொண்டாள்.]

நெற் பயிர் சடை சடையாய் விளைந்து கண்ணுக்கு எட்டாத தூரம் தலை சாய்ந்து கிடக்கிறது; அதை நாம் பார்த்து வியக்கிறோம்.

ஆனால் நெற்பயிரையே பாராத ஒருவன், கம்பம் புல்ப் பயிரை மாத்திரம் பார்த்திருக்கிறான். அங்கொன்று இங்கொன்றாய்ச் சிதறி நிற்கிற பயிர்தானே அது! அவனிடத்தில் நெற்பயிர் என்றால், கம்பம் பயிர்போல் ஒன்றுதான் என்று நாம் தெரியப்படுத்தலாம். ஆனால், அவனுக்கு நெற் பயிரின் விசித்திரம், வளம் ஏதேனும் தெரியவா செய்யும்?

வில்லொக்கும் நுதல்,என்று லும் ;
வேல்லொக்கும் விழி,என்று லும் ;
பல்லொக்கும் முத்(து),என்று லும் ;
பவளத்தை இதழ்,என்று லும் ;-
சொல்லொக்கும், பொருள்ஒவ்வா வால் :
சொல்லலாம் உவமைஉண் டோ !
நெல்லொக்கும் புல்,என்று லும் ;
நேர்உரைத் தாகவற் றே !

[நேர் உரைத்தாக வற்றே: விஷயத்தை நேர்முகமாகச் சொன்னதாக ஏற்படுமோ; வற்றே: வலி கொண்டதாகுமோ வார்த்தை?]

மறுபடியும்மறுபடியும் சீதையினுடைய அங்கங்கள் சூர்ப்பனகையின் கண் முன் னால் வருகின்றன. அவைகளின் அழகை எடுத்துச் சொல்ல மனம் தூண்டத்தான் செய்கிறது. சாத்தியப்படுகிற காரியமா அது! மனம் திகைத்துப் போய் விடு கிறது. ஆனாலும் சொல்லுகிறாள்.

தோளையே சொல்லுகே னோ !
சுடர்முகத் துலவுகின் ற
வாளையே சொல்லுகே னோ !
அல்லவை வழுத்துகே னோ !
மீளவும் திகைப்பதல் லால்,
தனித்தனி விளம்பல் ஆற்றேன் !—
தாளையே காண்டிஐ ய !
நான்உனக்(கு) உரைப்பதென்னோ !

[சுடர்முகத்து உலவுகின்ற வாளை : பிர காசத்தோடு கூடிய முகத்தில் அப்படியும் இப்படியுமாக விசி அழகு செய்கிற வாள் போன்ற கண்ணைத்தான் ; அல்லவை வழுத்து கேனோ: மற்ற அங்கங்களைப் புகழ்வேனோ ; மீளவுந் திகைப்பதல்லால் : யோசிக்க யோசிக்கத் திகைப்புதான் உண்டாகிறது ; தாளையே காண்டி : தாளைக்குத்தான் நேர் நேராகக் காணப்போகிறாயே ; நான் உனக்கு உரைப்பது என்னோ: நான் உனக்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் ஏதோ.]

வர்ணனை என்பது இலக்கியத்தில் கஷ்டமான காரியம். ஒரு பெண்ணின் அழகை வர்ணித்துப் பார்த்தால்தான் கஷ்டம் தெரியவரும். வர்ணனையில் உண்மை இருக்க வேண்டும். அந்த உண்மையை வாசகர்கள் உள்ளத்துக் குள்ளும் புகட்டி விடவேண்டும்.

இதைச் சாதிப்பதற்கு ஒரு அபூர்வ சக்தியே வேண்டும். சூர்ப்பனகையின் வாயிலாகக் கம்பர் சீதையின் அழகை வர்ணிக்கிறார். அப்படி வர்ணிப்பதற்குத் தமிழ் பாஷை, தமிழ்க் கவியின் தானங்கள் எல்லாம் சேர்ந்து அவ ருக்கு உதவி புரிந்து விடுகின்றன.

அதிர்ஷ்டசாலி!

எஸ்.சங்கரன்

வழக்கம்போல் கணபதி முதலியார் தம் கடையைத் திறந்து உட்கார்ந்து கொண்டார். அவருடைய கண்கள் கடைசித் தடவையாகக் கடையைச் சுற்றிப் பார்த்தன — ஆம்; கடைசித் தடவையாகத்தான்! — முப்பது வருஷ காலமாக கஷ்டமோ கஷ்டமோ ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் அவர் தம் புத்தக வியாபாரத்தை நடத்தி வந்தார். இன்று, இன்னும் சில மணி நேரத்துக்குள் அவர் அங்கிருந்து கிளம்பி விட வேண்டும். கடை ஏலத்தில் போய் விடும். கேவலம், சில நூறு ரூபாய்களுக்காகக் கடன்காரர்கள் இம்மாதிரிச் செய்வார்கள் என்று அவர் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

அவருடைய மனம் வாழ்க்கையின் கடந்து போன நாட்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தது. மனைவியும் மகனும் அவரை மதிக்கவில்லை: போகட்டும். முதலியார் கண்ணை மூடினால் அவருடைய மனைவிக்கு ஐயாயிரம் ரூபாய் கைக்கு வரும். தான் உயிரோடிருக்கும் வரை அதில் ஒரு தம்பிடிகூடத் தன்னால் அனுபவிக்க முடியாது. வாழ்க்கையில் அவருக்கு ஆறுதலளித்தது அந்தப் புத்தகக் கடை ஒன்றுதான். அதுவும் இனிமேல் போய்விடப் போகிறது. தாம் வருஷக் கணக்காகத் தூசி தட்டி, அருமையாய்ப் போற்றி வந்த புத்தகங்கள் கடன்காரர்களின் வீட்டு அடுப்பை எரிக்கவோ, அல்லது பொட்டணம் கட்டவோதான் உபயோகப் படப் போகின்றன!

ஆனாலும் மானம் போன பிறகு வாழ்க்கை என்னத்திற்கு? தம் முன்னால் கடன்காரர்கள் ஏலம் போடுவதைத் தடுக்க வேண்டும். ஆமாம்; அவர்களுக்கு 'டிமிக்கி' கொடுக்கத்தான் வேண்டும். அதற்கு ஒரே வழி, தாம் செத்துப் போய்விடுவதுதான்.

. இந்தத் தீர்மானம் ஊர்ஜிதமானவுடன் தமது கையிலிருந்த மூன்று ரூபாய் எழுபதைப் 'பர்ஸில்' போட்டுக்கொண்டு அவர் வெளியே கிளம்பினார். "எப்படிச் சாவது?" என்ற பிரச்னை குறுக்கிட்டது. பாஷாணம் சாப்பிட்டால் சீக்கிரம் சாகலாம். ஆனால் அதை உடனே எப்படிச் சம்பாதிப்பது? அதைவிடச் சமுத்திரத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வது சிலாக்கியமாகப்பட்டது அவருக்கு. ஆனால் ஒரு வேளை 'ஷார்க்' மீன்கள் தம் உடம்பைத் தின்றுவிட்டால் இன்ஷ்யூரன்ஸ்காரர்கள் பணம் கொடுக்கத் தகராறு செய்வார்களே! அந்த ஐயாயிரத்தில் இம்மியளவு குறைந்தால்கூட அவருடைய மனைவி நரகத்திலும் அவரை நிம்மதியாக விட்டு வைக்க மாட்டாளே!

இப்படியெல்லாம் யோசித்த வண்ணம் முதலியார் இகலோக ஸ்மரணையே இல்லாமல் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று எதிரே கூக்குரலும், சத்தமும் கேட்டன. நாலா பக்கத்திலுமிருந்து ஜனங்கள் ஓடி வந்து கொண்டிருந்தனர். அவருக்கு எதிரே கொஞ்ச தூரத்தில் ஒரு முரட்டு ஆசாமி ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்கே பயங்கரமாயிருந்தது. இளநீர் வெட்டும் பெரிய அரிவாள் ஒன்றை அவன் தன் வலது கையில் வைத்திருந்தான். ஜனங்கள் அவனைப் பிடிக்கவும் முடியாமல், விடவும் முடியாமல் தயங்கிக் கொண்டிருந்தனர். அவன் உரத்த குரலில், "இன்னிக்கு மூணு கொலையாச்சு! எவனாச்சும் கிட்டே வந்தா, ஒரே போடுதான்!" என்று எல்லோரையும் பயமுறுத்திக்கொண்டே ஓடி வந்தான். அதைக் கேட்ட முதலியாரின் முகம்



மலர்ந்தது. முரட்டு ஆசாமியை ஒரு தரம் கூர்ந்து கவனித்தார். அவன் உடலமைப்பும் நிலைமையும், கொஞ்சம் கூடத் தயவு தாட்சண்யம் பார்க்க மாட்டான் என்பதைக் காட்டின. சாவதற்கு இதைவிட நல்ல வழி ஏது? மேலும் தம்

மைச் சுற்றி இவ்வளவு சாட்சிகள் இருக்கும்பொழுது, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கூட ஒரு ஆக்ஷேபமும் சொல்ல முடியாதல்லவா?

ஈச்வரனை ஒரு தடவை மனதில் தியானம் செய்து விட்டு அந்த முரடனை நோக்கி ஓடினர் முதலியார். இமைப் பொழுதில் இருவரும் கட்டிப் புரண்டனர். துரதிர்ஷ்டவசமாக அவன் வீசிய அரிவாள் தவறி விட்டது. ஜனங்கள் ஒரு கணம் திடுக்கிட்டனர். அதற்குள் போலீஸார் பாய்ந்து வந்து அந்த முரடனின் கைக்கு விலங்கைப் பூட்டினர்.

முதலியார் செத்துப் போய்விட்டோம் என்ற திருப்தியுடன் கீழே விழுந்து கிடந்தார். பின்வரும் சம்பாஷணை அவர் காதில் விழுந்தது:

"இவ்வளவு தைரியமாக இவனைப் பிடித்தது யார்?" என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"அதோ இருக்கிறாரே, அவர்தான்! தன்னந் தனியாகத் தம் உயிரைக்கூட லக்ஷ்யம் செய்யாமல் சென்று அவனைக் கீழே தள்ளினார்!" என்று அங்கே கூடியிருந்த அனைவரும் முதலியாரைச் சுட்டிக் காட்டினர்.

"போகட்டும்; அந்த மனிதர் அதிர்ஷ்டசாலிதான்! இந்தப் பழைய 'கேடி'யைப் பிடித்துக் கொடுப்பவருக்குச் சர்க்கார் ரூபாய் 5000 பரிசு கொடுக்கத் தீர்மானித்திருந்தனர் — சரி, யாருக்காவது இவருடைய விலாசம் தெரிந்தால் சொல்லுங்கள், பரிசுப் பணத்தையும் இவரையும் கொண்டு போய் வீட்டில் சேர்த்து விடுவோம்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

இதைக் கேட்ட முதலியார் தாம் செத்துப் போகவில்லை என்பதைத் தெரிந்து கொண்டார். ஆனால் அதற்காக அவர் வருத்தப்பட வில்லை!

காலக்ஷேபம்

ஒரு யோசனை!

"என் பெண்ணுக்குப் பிடில் வாங்குவதா, ஆர்மோனியம் வாங்குவதா என்று தெரியவில்லை."

"ஏன், ஆர்மோனியமே வாங்கிவிடுங்களேன்! அவள் அபஸ்வரமாகப் பாடும்போது ஒருவேளை உங்களுக்குக் கோபம் வந்து, அதைக் கிணற்றில் தூக்கிப் போடும்படி நேரலாம். அப்போது ஆர்மோனியமானால் நேரே உள்ளே போய்விடும்; பிடில் மிதந்தாலும் மிதந்து விடுமல்லவா?"

★

தீராத தொல்லை!

"கடன் அதிகமாகி விட்டது. அதைத் தொலைத்து விட்டால் மன நிம்மதியோடு இருக்கலாம்!"

"அதற்கு என்ன வழி?"

"யாராவது ஒரு இருநூறு ரூபாய் கடன் கொடுத்தால் போதும்!"

★

அதிசயம் இல்லை!

கோபு:—உலகத்திலுள்ள ஏழு அதிசயப் பொருள்களில் தாஜ்மஹாலும் ஒன்று. நாளைக்கு நான் அதைப் பார்க்கப்போகிறேன்.

கிட்டு:—எங்கள் அண்ணா அதைப் பார்த்திருக்கிறான்; அப்படியொன்றும் அது ஒரு அதிசயப் பொருளாக இல்லை என்கிறான்!

கோபு:—உங்கள் அண்ணாவே ஒரு அதிசயப் பொருளாய்த்தான் இருக்கவேண்டும். முதலில் அவனைப் பார்த்து விட்டுப் பிறகு தாஜ்மஹாலைப் பார்க்கப் போகிறேன்!

தெரியக் கூடாது!

செட்டியார் ஒரு தர்ம ஸ்தாபனத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் 'செக்' எழுதிக் கொடுத்தார். ஆனால் அந்தச் 'செக்'கில் அவர் கையெழுத்துப் போடவில்லை.

"தாங்கள் கையெழுத்துப் போடவில்லையே!" என்றார் வசூல் செய்ய வந்தவர்.

"இந்தக் கையாலே செய்யும் உதவி அந்தக் கைக்குத் தெரியக்கூடாது என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இந்தச் 'செக்'கில் நான் கையெழுத்துப் போட்டால் அது ஊர் முழுவதும் தெரிந்து போய் விடாதா?"

✳

மாறுதல்!

நீதிபதி:—உனக்கு ஐம்பது ரூபாய் அபராதமும், ஆறு மாதம் சிறைவாசமும் தண்டனை விதித்திருக்கிறேன்.

குற்றவாளி:—தண்டனையைக் கொஞ்சம் மாற்றினால் தேவலைங்க!

நீதிபதி:—சரி; ஆறு ரூபாய் அபராதமும், ஐம்பது வருஷம் சிறைவாசமும் விதித்திருக்கிறேன், போ!

✳

குற்றமில்லை!

மானேஜர்:—இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?

வேலைக்காரன்:—சாப்பிடப் போயிருந்தேனுங்க, எஜமான்!

மானேஜர்:—ஆபீஸ் நேரத்திலா சாப்பிடப் போவது?

வேலைக்காரன்:—நான் என்ன செய்யறதுங்க! ஆபீஸ் நேரத்திலேதான் பசிக்கிறதுங்க!

கடைசி நாள்

ஸோமாஸ்

உமாபதியின் சின்னஞ்சிறு வயதிலே, மழலை மாறாத பருவத்திலே பிரபல ஜோஸ்யர் ஒருவர், "இவன் கை எப்போதும் கொஞ்சம் ஓங்கித்தான் இருக்கும்; யாருக்கும் தாழாது. இவனிடம் எத்தனையோ பேர் கைகட்டிக் காத்துக் கிடப்பார்கள். பலர் இவனிடம் கை நீட்டுவார்கள்!" என்று சொன்னார்.

அந்த ஜோஸ்யர் சொன்னது அவ்வளவும் இம்மியளவுகூடப் பிசகாமல் உமாபதியின் வாழ்க்கையில் நடந்தேறியது. அந்த ஜோஸ்யம் பொய்யாயிருந்தால் உமாபதி 'ஊருக்கு இளைத்த உபாத்தியாயர்' வேலைக்குப் போயிருக்க முடியுமா?

ஜோஸ்யர் சொன்னபடி உமாபதி வகுப்புக்குள் நுழைந்தால் எத்தனை எத்தனையோ மாணவர்கள் கைகட்டி நின்றனர். தவறு செய்த மாணவன் அவருக்கு முன்னால் வந்து நின்று கை நீட்டி, பிரம்படி வாங்கிக் கொண்டான். மாணவர்களின் தவறுக்குத் தண்டனை கொடுக்க அவர்கள் தலையில் குட்டும்போதெல்லாம் அவருடைய கை ஓங்கித்தான் இருந்தது.

உமாபதிக்கும் எல்லோரையும் போல் விவாகம் நடந்தது. ஆனால் அவர் தம் வாழ்க்கையில் காதலைத் தேடித் தவிக்கவில்லை. கடமையுணர்ச்சியுடனேயே தம் வாழ்நாட்களைத் தள்ளி வந்தார்.

முப்பத்தைந்து வருஷ காலமாக அவர் பள்ளிக்கூடத்தில் நல்ல பெயர் வாங்கியிருந்தார். ஒரு சிறு தவறை ஒரு மாணவனிடம் கண்டுவிட்டாலும் உமாபதி நரசிம்ம சொரூபமாக மாறிவிடுவார். அப்பொழுது அவர் மிகவும் தாராள மனப்பான்மையுடன் பிரம்பை உபயோகிப்பார்.

அன்று உமாபதி மஞ்சள் நிறக் கோட்டையும் சரிகைத் தலைப்பாகையையும் அணிந்து கொண்டிருந்தார். சாதாரண நாட்களில் அவர் இந்தக் கோட்டையும் தலைப்பாகையையும் அணிவதில்லை. இன்ஸ்பெக்டர் வரும் தினத்தில்தான் அணிவார். எனவே, இன்று ஏதோ விசேஷம் இருக்கவேண்டும் என்று மாணவர்கள் ஊகித்தனர்.

அதற்கேற்றாற்போல் அன்று இன்னும் சில அதிசயங்கள் நடந்தன. தினந் தவறாமல் மணியடித்த பிறகு பள்ளிக்கூடத்துக்கு வரும் ராமுவையும், ஓயாமல் 'சில் விஷமம்' செய்யும் கோவிந்தராஜனையும் அன்றைய தினம் உபாத்தியாயர் உமாபதி வழக்கத்துக்கு விரோதமாகப் பிரம்பினால் பதம் பார்க்கவில்லை.

போக்கிரி ராமு நடுங்கிக் கொண்டே வகுப்பில் காலைத் தயக்கத்துடன் வைத்தான்.

"வா அப்பா, ராமு! ஏன் வெளியில் நிற்கிறாய்? உன் இடத்தில் போய் உட்கார்!" என்ற அன்பொழுகும் உமாபதியின் வார்த்தையைக் கேட்டதும், ராமு மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விடுவான் போலிருந்தது.

பிறகு உமாபதி தழதழத்த குரலில், "குழந்தைகளே, இன்றைக்கு நான் உங்களுக்குக் கடைசியாகப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போகிறேன். ஆகையினால் கவனமாய்க் கேளுங்கள்!" என்று ஆரம்பித்தார்.

"ஏன் ஸார்! ஏன் ஸார்.........?" என்று வகுப்பு முழுவதும் பல குரல்கள் எழுந்தன.

"ஆமாம்; இதுதான் நான் பாடம் சொல்லிக் கொடுக்கப் போகும் கடைசி நாள். நாளை முதல் உங்களுக்குப் புது உபாத்தியாயர் வருவார். அவரிடம் நீங்கள் படிக்க வேண்டும். அவர் சொன்னபடி கேட்கவேண்டும்."

இதைச் சொல்லி முடித்தபோது உமாபதியின் கண்களின் ஓரத்தில் நீர் நிறைந்து விட்டது!

"வேண்டாம், ஸார்! நீங்களே இருங்கள், ஸார்!" என்று ராமு சோகத்துடன் கூறினான்.

"உனக்குத் தெரியாது அப்பா, ராமு! நம்முடைய தாலூகா போர்டுக்கு புதிய பிரஸிடெண்டாக கந்தசாமி ரெட்டியார் வந்திருப்பது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். அவர் எனக்கு ...... அவர் எனக்கு ...... வயதாகி விட்டது என்றும், பாடம் சொல்லத் திறமையில்லையென்றும் சொல்லி என்னை இன்றோடு வேலையிலிருந்து நீக்கி விட்டதாக உத்தரவு செய்திருக்கிறார். அந்த உத்தரவுப்படிதானே அப்பா நான் நடக்க

வேண்டும்? இன்று மத்தியானம் அவரும் அவருடைய மருமகன் வடிவேல் ரெட்டியாரும் வருவார்கள். வடிவேல் ரெட்டியார்தான் உங்களுடைய புது உபாத்தியாயர். அவர்களிடம் நான் இன்று மத்தியானம் ஒரு மணிக்கு 'ஸ்கூல் சார்ஜ்' ஒப்புவிக்க வேண்டும். அதனால் இன்று இலக்கணத்தையும், கணக்கையும் மட்டும் சொல்லிக் கொடுக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு இலக்கணப் பாடத்தை ஆரம்பித்தார்.

ஒவ்வொரு மாணவனும் முதல் நாள் நடந்த பாடத்தை ஒப்பித்தான். ராமுவின் முறை வந்ததும் அவன் உடம்பு அடிபடுவதற்குத் தயாராக நெளிந்தது.

இந்தமாதிரி சமயங்களில் உபாத்தியாயர் உமாபதி பயங்கரமாக ராமுவை அடித்திருக்கிறார். ஆனால் இன்று அவர் முகத்தில் கோபத்தையே காணோம். அதற்கு மாறாகச் சாந்தம் ததும்பி நின்றது.

"ஏன் அப்பா, ராமு! பாடம் படிக்கவில்லையா? இன்றைக்காவது நீங்கள் எல்லோரும் பாடம் சரியாய் ஒப்பித்தால் எனக்கு எவ்வளவு திருப்தியாக இருக்கும்?" என்றார் உமாபதி சோகங் கலந்த குரலில்.

ராமுவின் கண்களில் மள மளவென்று கண்ணீர்பெருகி விட்டது. அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான். அதைக் கண்ட உமாபதி, "ராமு, ஏன் அப்பா அழுகிறாய்? நான் உன்னை அடிக்கவில்லையே!" என்று கூறி எழுந்து சென்று அவனை அழைத்து வந்து கண்ணீரைத் துடைத்து விட்டுப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார்.

இலக்கணம் முடிந்ததும் உமாபதி கணக்குப் பாடம் ஆரம்பித்தார். கரும்பலகையில் ஒரு கணக்குப் போட்டுக்காண்பித்தார். எல்லோரையும் அதைப் போடச் சொன்னார்.



வகுப்பு முழுவதும் பலகையின்மீது பலப்பம் தேயும் ஓசையைத் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. உபாத்தியாயர் உமாபதி ஆழ்ந்த சிந்தனையில் தமக்கெதிரிலிருந்த பிள்ளைகளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். தமது பதினெட்டாவது வயதிலிருந்து முப்பத்தைந்து வருஷ காலமாக உபாத்தியாயர் வேலை பார்த்து வரும் ஒரு உபாத்தியாயரை — வாழ்க்கையில் பள்ளிக்கூடத்தைத் தவிர வேறு ஒன்றையும் கண்டறியாத ஏழை உபாத்தியாயரை — வேலையை விட்டுப் போகச் சொன்னால் அவர் மனசு கஷ்டப் படாதா? அந்தக் கடைசி நாளன்றுகூட உமாபதி மனக் கலக்கம் சிறிதும் இல்லாமல் பாடம் சொல்லிக் கொடுத்தது பெரிய ஆச்சரியமில்லையா?

எல்லோரும் கணக்குப் போட்டு ஆனதும், "ஏன் ஸார்! நீங்கள் வகுப்புக்கு வரா விட்டாலும் வீட்டுக்கு வந்தால் சொல்லிக் கொடுக்கிறீர்களா? இந்த ஊரிலேதானே ஸார் இருப்பீர்கள்?" என்று கேட்டான் ராமு.

"எனக்கு இங்கென்ன வேலையிருக்கிறது? நான் என் பிள்ளையின் ஊருக்குப் போகிறேன். உங்களைப் பிரிந்து போக மனம் வரவில்லை......ஆனால்...... நான் என்னசெய்யமுடியும்?—சரி, கணக்குப்போட்டாயிற்றா?" என்று கேட்டார்.

பையன்களுடைய கணக்குகளையெல்லாம் பார்த்துவிட்டுத் திருத்திக் கொடுத்தார். அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. உபாத்தியாயர் உமாபதி கண்களைத் துடைத்துக்கொண்டு கரும்பலகை யருகில் போய் நின்றார்.

அதன் மேல், "குழந்தைகளே, உங்களுக் கெல்லாம் கடவுள் நல்லது செய்வாராக!" என்று எழுதினார். பிறகு வெளியே சென்று மாணவர்களைப் பார்த்து ஒருவிதமாகத் தலையை அசைத்தார். பையனெல்லாம் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு

வகுப்பை விட்டு வெளியே வந்தனர். உபாத்தியாயர் ஒவ்வொரு பையனையும் முதுகில் தட்டித் தடவிக் கொடுத்து விட்டு, விடுவிடு என்று நடந்து போய்த் தூரத்தில் மறைந்தார்.

★

மறுநாள் காலை பள்ளிக்கூடம் திறந்ததும்! மாணவர்களுக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. உமாபதி, அவருடைய வாழ்க்கையிலேயே முதல் தடவையாக அன்று காரில் வந்து இறங்கினார். அவருடன் தாலூகா போர்டு பிரஸிடெண்ட் கந்தசாமி ரெட்டியாரும் வந்து இறங்கினார். இருவரும் பள்ளிக்கூடத்தில் நுழைந்ததும் பையன்களெல்லாம் மிகவும் அமைதியாக இருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோருடைய முகத்திலும் ஆச்சரியக் குறியும் கேள்விக் குறியும் தோன்றின.

கந்தசாமி ரெட்டியார் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பித்ததும் ஏற்கெனவே இருந்த அமைதி இன்னும் அதிகமாயிற்று :—

"மாணவர்களே, இன்று ஒரு நல்ல செய்தி உங்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்கள் அபிமானத்துக் குரிய உபாத்தியாயர் உமாபதி இன்னும் ஐந்து வருஷங்களுக்கு உபாத்தியாயராக இருப்பார்!" என்று கந்தசாமி ரெட்டியார் கூறியதும், பையன்கள் கடல் முழக்கம் போல் சரகோஷ ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். உமாபதியும் வழக்கம் போல் வகுப்பை நடத்த ஆரம்பித்தார்.

★

"என்ன வாத்தியார் ஸார்! உத்தியோகத்திலிருந்து விலகி விட்டதாகவும் சென்னைக்குப் போய்ப் பிள்ளையிடம் இருக்கப்போவதாகவும் சொன்னீர்களே, எப்பொழுது பயணம்?" என்று ஒரு நாள் அவருடைய நண்பரான ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டார்.

உமாபதி களை பொங்கும் முகத்துடன், "ஊருக்குப் போகவில்லை, ஸார்! ரெட்டியார் பெரிய மனசு பண்ணி எனக்கு இன்னும் ஐந்து வருஷம் வேலை கொடுத்திருக்கிறார். எல்லாம் ஆண்டவன் சித்தம்!" என்றார்.

உடனே, உமாபதியுடன் வந்திருந்த போஸ்ட்மாஸ்டர், "அதெல்லாம் ஒன்றுமில்லை, ஸார்! ரெட்டியார் ஒன்றும் உம்மிடம் கருணை காட்டிவிடவில்லை. அவர் தம் மருமகனுக்கு உமது வேலையைச் செய்து வைக்கலாம் என்று இருந்தார். ஆனால் அவனுக்குப் போஸ்டல் டிபார்ட்மெண்டில் வேலை கிடைத்துவிட்டது. அதனால் உம்மையே மறுபடியும் வாத்தியார் வேலை பார்க்கும்படி சொல்லிவிட்டார்!" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

"போஸ்டல் டிபார்ட்மெண்டில் என்ன வேலை?" என்று கேட்டார் உமாபதி.

"போஸ்ட்மேன் வேலை! ஏற்கெனவே ரெட்டியாரின் மருமகன் தபால்காரர் ஸ்டிரைக் செய்திருந்தபோது 'கருங்காலி'யாக வேலை பார்த்து வந்தான். நேற்று முதல் அவனுக்குப் போஸ்ட்மேன் உத்தியோகம் 'காய'மாகி விட்டது!"

"போயும் போயும் அவருடைய மருமகன் போஸ்ட்மேன் வேலைக்குத்தானா போகவேண்டும்!"

"சரியாய்ப் போச்சு! போஸ்ட்மேன் சம்பளம் உபாத்தியாயருக்கு ஏது?" என்றார் போஸ்ட் மாஸ்டர்.

அனுமக் கவசம்

ஸி. ஆர். ராமஸ்வாமி

சதாசிவய்யர் திருச்சியில் இருபது வருஷமாய் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். தொழில் விருத்தியடைந்தது. பணமும் சேர்ந்தது. ஆனால் உமா என்ற பெண்ணைத் தவிர வேறு சந்ததி இல்லை. அவள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறிப் பருவமும் அடைந்தாள். அவளுக்கு வயது பதினாறு. பருவத்தின் தேஜஸ் சந்தியா சூரியன் மரஞ் செடிகளுக்கு வர்ணிக்க முடியாத ஓர் அழகைத் தருவதுபோல் அவளுடைய அழகிற்கு மெருகு தந்தது. அவளுடைய தாயார் பார்வதியம்மாள் பன்னிரண்டு வயதிலேயே தனக்குக் கல்யாணம் ஆனதை நினைத்துத் தன் பெண்ணுக்கு உடனே கல்யாணம் செய்து வைத்து விடுவது அவசியமென்று கருதினாள்.

ஆகவே, ஒருநாள் அவள் தன் கணவனைப் பார்த்து, "உமாவுக்குக் கல்யாணம் பண்ணிவிட வேண்டும். தம்பி சங்கரனுக்குக் கல்யாணம் செய்துவிட நிச்சயித்திருப்பதாக அப்பா எழுதி ஜாதகத்தையும் அனுப்பியிருக்கிறார். ஏன் வெளியே வரன் தேடி அலையவேண்டும்?" என்றாள்.

சதாசிவய்யர், "வரதக்ஷிணையைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லையா? சங்கரன் பி. ஏ. பரீட்சையில் தேறவில்லையே! சரியாய்ப் படித்து ஏதாவது நல்ல உத்தியோகம் செய்து சம்பாதித்தால்தானே புருஷனிடத்தில் படித்த பெண்ணிற்கு மரியாதையிருக்கும்? தம்பதிகள் அன்யோன்யமாய் வாழ முடியும்?" என்றார்.

பார்வதியம்மாள், "அவன் பரீட்சைக்குச் சரியாய்ப் படிக்கவில்லை. ஜோசியமும் கைரேகையும் கற்றுக் கொள்கிறேனென்று பொழுதைப் போக்கிவிட்டான். அடுத்த பரீட்சையில் தேறி விடுவான்" என்றாள்.

சதாசிவய்யர், "உமாவைக் கூப்பிடு! அவளுக்கு இஷ்டமா என்று கேட்டு விடலாம்!" என்றார்.

பார்வதி, "அவளைக் கேட்கவேண்டுமா? சங்கரன் அழகிலோ, புத்தியிலோ இவளுக்குக் குறைந்தவனா? இல்லை, சாப்பாட்டிற்குத்தான் பயமா? காவேரிக் கரையில் வேண்டிய நிலமிருக்கிறது. இந்தக் காலத்து கோட்டுகளையும் பாங்கிகளையும் விட நிலத்தை நம்பலாம்" என்றாள்.

சதாசிவய்யர், "சரி: எதற்கும் உமாவைக் கூப்பிடு! அவளை ஒரு வார்த்தை கேட்டு விடுவது நல்லது!" என்றார்.

பார்வதியம்மாள், "உமா, உமா!" என்று தன் பெண்ணை அழைத்தாள்.

உமா, "ஏன், அம்மா!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

சதாசிவய்யர், "உனக்கு உடனே கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று அம்மா சொல்லுகிறாள். சங்கரனைத் தேர்ந்தெடுத்திருக்கிறாள். உனக்குச் சம்மதமா?" என்றார்.

உமா, "அவர் மேலே படிக்கப்போகிறதில்லையா?" என்று கேட்டாள்.

சதாசிவய்யர், "பார்த்தாயா, உன் பெண்ணின் போக்கை! 'சங்கரன் பி. ஏ. கூடப் படிக்கவில்லையே, நான் நன்றாய்ப் படித்தவனைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்' என்கிறாள். நீ உன் அப்பாவுக்குச் சங்கரனை பி. ஏ. வரை படிக்கச் சொல்லி எழுது. வேண்டுமானால் ஹாஸ்டலில் இருப்பதை விட்டுவிட்டு இங்கேயே இருந்து படிக்கச் சொல்!" என்றார்.

உண்மையில், உமா காலேஜ் படிப்பில் அவ்வளவு மோகங் கொண்டவளல்ல. ஆனால் எந்தப் புத்திசாலிப் பெண்தான் தன்னை மணப்பவன் நன்றாய்ப் படித்துப் பெரிய உத்தியோகம் செய்பவனாயும் எல்லோராலும் மதிக்கப்படுபவனாயும் இருக்கவேண்டுமென்று விரும்ப மாட்டாள்? ஆகவே, சங்கரன் மேலே படிப்பதற்கு ஒப்புக்கொண்டு, தன் வீட்டிலேயே தங்கிப் படிப்பானென்று அவள் ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

★

சங்கரனின் தாயார் பல தடவை, "நீ படிக்காவிட்டால் உமா உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாள்!" என்று தன் மகனைக் கேலி செய்தாள். சங்கரனோ, "படிப்பில் என்ன இருக்கிறது? பிராமணர்கள் தங்கள் தர்மத்தை விட்டு விட்டுப் படித்துச் சோற்றுப் பச் சம்பளத்திற்காக ஏன் குணமற்றவர்களுடன் போட்டி போட்டு அலைய வேண்டும்? நான் பெரிய ஜோதிடனும்



மந்திரவாதியுமாகப் போகிறேன். மற்றவர்கள் முன் கைகட்டி நிற்க மாட்டேன். ராஜாக்களும் பெரிய உத்தியோகஸ்தர்களும் என்னிடம் வந்து காத்திருப்பார்கள். என் ஜாதகத்தில் உமாவைத் தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறதாக இருக்கிறது!'' என்றான்.

ஒரு வாரம் கழித்துப் பார்வதியின் தகப்பனார் சாம்பசிவய்யரிடமிருந்து பின் வருமாறு பதில் வந்தது.

''மாப்பிள்ளைக்கு ஆசீர்வாதம்.

நான் சங்கரனைக் கேட்டேன். அவன், நான் மேலே படிக்கப் போவதில்லை என்கிறான். மேலும் தனக்கு அந்தப் பெண் அவசியமில்லை; கல்யாணமாகுமுன் நிபந்தனைகளைக் கோரும் பெண் வேண்டியதே இல்லை. 'இப்பொழுது அப்படி கேட்பவள் கல்யாணமானபின் குழந்தைகள் வேண்டாமென்பாள்; உத்தியோகம் செய்வேனென்பாள்; சினிமாவில் சேர விரும்புவாள். அவள் படிப்பிற்கு நான் தடையாக இருக்க விரும்பவில்லை. அவளுக்காக நான் மேலே படிக்கவும் விரும்பவில்லை' என்கிறான். எனக்கும் அவன் சொல்வதில் பிசகில்லை என்றே தோன்றுகிறது.

சாம்பசிவன்.''

இதை உமாவிற்கு அவள் அப்பா படித்துக் காட்டினார். அவள் மிகவும் வருத்தமடைந்தாள். ''நான் படிப்பை நிறுத்திக் கொள்கிறேன், அப்பா!'' என்றாள். அதற்கு அவள் தகப்பனார், ''நீ அப்படி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அவன் கொஞ்ச நாள் கழித்து வழிக்கு வருவான். எதைப் பற்றியும் கவலைப்படாமல் படி!'' என்று அவளைக் காலேஜில் சேர்த்துவிட்டார்.

ஒரு வருஷம் கழித்து, சாம்பசிவய்யர் ஊற்றில் ஸ்நானம் செய்கையில் வலிப்பு வந்து மூழ்கி இறந்துவிட்டதாகவும், சங்கரன் வாழ்க்கையில் வெறுப்படைந்து நிலத்தை விற்றுவிட்டுக் காசி யாத்திரை போய் விட்டதாகவும் பார்வதிக்குக் கடிதம் வந்தது. பார்வதியம்மாள், ''இந்தமாதிரியும் ஒரு தம்பி உண்டா? எனக்கு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டானே!'' என்று வருந்தினாள். கணவனைப் பார்த்து, ''நீங்களும் உங்கள் பெண்ணும் சேர்ந்து அவன் மனதைப் புண்படுத்தியதால்தான் இது ஏற்பட்டது!'' என்று நிந்தித்தாள்.

சதாசிவய்யர் ''இந்தமாதிரி சஞ்சல புத்தியுள்ள பையனுக்கு உமாவைக் கொடுக்காதிருந்ததே நல்லதாயிற்று!'' என்று சொன்னார். உமா மட்டும் தன் மனதிலுண்டான துக்கத்தை யாருக்கும் காண்பித்துக் கொள்ளவில்லை. தான் காட்டின உதாசீனத்தால்தான் சங்கரன் வெறுப்படைந்து சந்நியாசி ஆகிவிட்டானென்று அவள் உள்ளம் சொல்லிற்று. அவன் தனக்குக் கிட்டமாட்டானென்பதைத் தெரிந்துகொண்ட பின்புதான் அவன்மேல் தனக்கிருந்த பாசத்தை உமா உணர்ந்தாள்.

★

நான்கு வருஷங்கள் சென்றன. உமா பி. ஏ. படித்து முடித்தாள். அவள், சங்கரனைப் பற்றி ஏதாவது செய்தி அகப்படுமா என்று வடதேசத்துப் பத்திரிகைகளைப் பாராயணம் செய்ததெல்லாம் வீணாயிற்று. பார்வதி தன் தம்பி தனக்குக் கடிதமாவது எழுதுவானென்று எதிர்பார்த்ததும் பலனளிக்கவில்லை.

கடைசியில், உமாவிற்கு வேறு வரன் தேடும்படி பார்வதியம்மாள் தன் கணவனைத் தூண்டினாள். சதாசிவய்யர் பம்பாயிலுள்ள சில சிநேகிதர்களுக்குக் கடிதம் எழுதினார். அங்கே கிருஷ்ண

சாமி என்ற ஓர் என்ஜினீயரிங் பரீட்சை பாஸ் செய்தவன் நெசவு ஆலையொன்றில் மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளமுள்ள வேலையிலிருப்பதாகச் செய்தி கிடைத்தது. ஆசாமி குள்ளமாகவும், பெயருக் கேற்பக் கறுப்பு நிற முள்ளவனாகவும் இருந்ததாகக் கேள்வி. ஆனால் என்ஜினீயர் வேலையிலிருக்கிற கௌரவத்தை உத்தேசித்து, ஒருவேளை வேலை போய்விட்டால் கையில் பணமிருப்பது நல்லதென்ற சௌகரியத்தையும் உத்தேசித்து மூவாயிரம் ரூபாய் வரதக்ஷிணை முன்னால் வைத்துவிட வேண்டுமென்று கேட்கப்பட்டது. சதாசிவய்யர் மாப்பிள்ளையை 'ரிசர்வ்' செய்வதற்காகக் கேட்ட பணத்தை அனுப்பிவிட்டார். முகூர்த்தம் நிச்சயம் செய்து கடிதம் எழுதினார். பையனுடைய தகப்பனாரிடமிருந்து பின்வருமாறு பதில் கடிதம் வந்தது.

"ஜாதகம் பொருந்தவில்லையென்று பெரிய ஜோசியர் சொல்லுகிறார். ஆனால் பையன் ஜோசியர் சொல்வதை மீறிக் கல்யாணத்தை நடத்தச் சொல்லுகிறான். அதற்காகப் பெண்ணிற்கு ஒட்டியாணமும், வைர ஓலைகளும் செய்து போடவேண்டுமென்கிறான்.

சுப்பிரமணியன்."

இதைப் படித்ததும் சதாசிவய்யருக்குக் கோபம் வந்தது. கல்யாணத்தை நிறுத்தி விடச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு அவர் மனைவி, "கையிலிருந்த வரனை நழுவ விட்டுவிட்டு இப்போது அலைகிறீர்கள்! நகைகளைச் செய்து போட்டுத் தொலைத்து விடுங்கள்!" என்றாள்.

முகூர்த்தம் நெருங்க நெருங்க, சதாசிவய்யர் தன் குமாரியின் முகம் வாட்டமடைவதைக் கண்டார். ஒரு நாள் அவள் தனியாய் அழுவதைக் கண்டு, "ஏனம்மா அழுகிறாய்?" என்று கேட்டார்.

உமா, "எனக்குக் கல்யாணம் வேண்டாம், அப்பா!" என்று உரக்க ஆரம்பித்தாள்.

அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பார்வதியம்மாள் ஓடி வந்தாள். பெண் அழுவதைப் பார்த்து, "கல்யாணமாக இருக்கையில் இப்படி அபசகுனம் மாதிரி அழுவார்களா?" என்று கடிந்தாள்.

சதாசிவய்யர், "சரி, ஜாதகம்தான் பொருந்தவில்லை என்கிறார்களே, கல்யாணத்தை நிறுத்தி விடலாம். கொடுத்த பணம் போனால் போகிறது!" என்றார்.

பார்வதியம்மாள், "இந்த வரனையும் விட்டுவிடுங்கள், பெண்ணை வீட்டிலேயே வைத்துக் கொள்ளுங்கள்!" என்று கோபமாய்ச் சொன்னாள்.

அதற்குச் சதாசிவய்யர், "அவள் எல்.டி.யோ அல்லது வாத்தியார் வேலைக்கோ



வைத்திய வேலைக்கோ படிக்கட்டும். அவளுக்குப் பிடிக்காதவனுக்குக் கட்டி அவள் வருந்துவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியாது. நான் எதற்கும் பம்பாய்க்குப் போய் மூவாயிரத்தில் நஷ்ட ஈடாக ஏதாவது கொடுத்து விட்டுக் கல்யாணத்தை நிறுத்திவிடச் சொல்லுகிறேன்" என்று அன்றே பம்பாய்க்குப் புறப்பட்டார்.

★

ஒரு வாரம் கழித்து அவரிடமிருந்து பின் வருமாறு கடிதம் வந்தது.

"நான் பம்பாயில் பையனைப் பார்த்தேன். அவன் பேராசை பிடித்தவன். அவன் தகப்பனார் உண்மையாகவே ஜோசியத்தை நம்பிக் கல்யாணம் கூடாதென்றும் பையனை ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொள்ளும்படியும் சமாதானப்படுத்தினார். நான், 'அந்த மாதிரி ஜோஸியம் சொன்னவர் யார்? சங்கரன் எங்கே இருக்கிறானென்று ஜோஸியத்தால் அறிய முடியுமா?' என்று அந்தப் பிராமண

லைக் கேட்டேன். அவர் அந்த ஜோசியரிடம் என்னை அழைத்துச் சென்றார். நாங்கள் அங்கே சென்றபோது, அந்த ஜோசியரைப் பேட்டி காணப் பெரிய பெரிய ஜமீன்தார்களும் ராஜாக்களும் காத்திருந்ததைக் கண்டோம். அவன் அவர்களையெல்லாம் காக்க வைத்து விட்டு என்னை மட்டும் தனியே கூப்பிட்டு, 'உங்கள் பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்தேன். அவளுடைய ஜாதகமும் என் ஜாதகமும் ஒத்திருக்கிறது. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஆனால் அவள் என்னை மதிக்கவில்லை. உத்தியோகத்தையும், பணத்தையும், படிப்பையும் பெரிதாய்க் கருதினாள். நான் வெறுப்படைந்து ஒரு குருவினிடம் சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் பார்த்தேன். அவர், 'நீ சந்நியாசம் பெறத் தகுதியற்றவன். உனக்கு மந்திரங்கள் கற்றுத் தருகிறேன். அவற்றைக் கொண்டு ஜனங்களின் மனோ வியாதிகளுக்கு வைத்தியம் செய்' என்றார். நான் அவரிடம் கற்ற பலன்தான் இது!' என்று தன் ஆபீஸைக் காட்டி, 'உங்கள் பெண்ணின் ஜாதகத்திற்கும் என் ஜாதகத்திற்கும் அதிசயமான பொருத்தத்தைக் காண்கிறேன். எனக்கு மாதம் ஆயிரக் கணக்கில் வரும்படி வருகிறது. நான் ஆங்கிலத்தில் ஒரு ஜோதிடப் பத்திரிகை நடத்த விரும்புகிறேன். அதற்குப் படித்த பெண் தேவை. உங்கள் பெண்ணை நான் மணம் செய்துகொள்ள விரும்புகிறேன்' என்றான். நானும் ஒத்துக்கொண்டு விட்டேன். அவனின் படத்தை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். உமாவிற்குக் காட்டு!

இப்படிக்கு,
சதாசிவன்.

பார்வதியம்மாள் இதைப் படித்து விட்டு, "உங்கப்பா உன்னைவிடப் பெரிய பைத்தியம்! திடீரென்று முன்பின் தெரியாத ஒருவனை நம்பி அவனை உன் தலையில் கட்டப் பார்க்கிறாரே. போட்டோவைத்தான் பார்க்கலாம், கொடு! காகிதத்திற்குள் ஒன்றுமில்லையே!" என்றாள்.

உமா, "இந்தா, போட்டோ! கடிதத்தை நீ படிக்கும்போது போட்டோ கீழே விழுந்தது; நான் பார்த்து விட்டேன்!" என்று சொல்லிப் போட்டோவைத் தாயாரிடம் கொடுத்தாள்.

பார்வதி போட்டோவை வாங்கிப் பார்த்துவிட்டு, "உமா! இது சங்கரனல்லவா?" என்று கத்தினாள்.

உமா, "கீழே பெயர்கூடப் போட்டிருக்கிறதே!" என்றாள் சிரித்துக்கொண்டே.

பார்வதியம்மாள் போட்டோவின் கீழ் சங்கருடைய விலாசத்தைக் கண்டாள். சதாசிவய்யர் வரனைக் கையோடு அழைத்து வந்தார். கல்யாணம் விமரிசையாக நடந்தது. மாப்பிள்ளை கல்யாணம் முடிந்து ஐந்தாறு நாட்களில் உமாவைக் கூட்டிக் கொண்டு பம்பாய்க்குப் போய் விட்டான்.

சதாசிவய்யர் "The Future" என்ற பத்திரிகையைத் தன் சிநேகிதர்களுக்குக் காண்பித்தார். அது புரொபசர் சங்கர்-உமா, உமா-சங்கர் ஆகிய இருவர்களாலும் 'எடிட்' செய்யப்பட்டு வந்தது. டாக்டர் சங்கருடைய 'அனுமக் கவச'ங்களைச் சதாசிவய்யரின் வக்கீல் சிநேகிதர்களும், சப் ஜட்ஜுகளும் வாங்கிக் கட்டிக் கொண்டார்கள். கலெக்டரின் மனைவியும் கலெக்டருக்கு ஒன்று வாங்கிக்கொண்டு போனாள். கள்ள வியாபாரிகளும் வாங்கிக் கொண்டார்கள்.

* * *

நல்ல சங்கோசம்!

கபஸ்ரீ

ரயில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. எனது கண்ணில் கரித் துணுக்கு ஒன்று விழவே, 'டக்'கென்று தலையை உள்ளுக்கு இழுத்துக் கொண்டேன்.

எனக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஒரு வாலிபர் என்னை விழுங்கிவிடுவதுபோல் உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அந்த வண்டியில் எங்கள் இருவரைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அதற்காக, இப்படியா ஒரு பெண் பிள்ளையைச் சிறிதும் வெட்கமின்றி வெறித்துப் பார்ப்பார்கள்?


எனது கடைக்கண்ணால் அவரைப் பார்த்தேன்: அந்த வாலிபர் என்னை வெறித்துப் பார்ப்பதை நிறுத்தவில்லை.

அதோ, அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவர் என்னிடம் ஏதோ பேச விரும்புகிறார். அப்பப்பா! என்ன தைரியம், முன்பின் தெரியாத ஒரு பெண்ணுடன் திடீரென்று பேச!

அவர் மெதுவான குரலில், "மன்னிக்க வேண்டும். தங்கள் பேர் என்னவோ?" என்று வினவினார். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. குனிந்த தலை நிமிராமல், "சரோஜா!" என்று சொன்னவுடன்தான் எனக்கு உடம்பெல்லாம் 'குப்'பென்று வியர்த்து விட்டது!

"ஐயையோ! அப்படியானால் முந்தின ஸ்டேஷனில் இறங்கியவர் தங்கள் பேர் எழுதப்பட்ட பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கி விட்டாரே!" என்றார் சாவதானமாக, அந்தப் பாவி மனிதர்!

அடபாவமே! இதைச் சொல்வதற்கா இந்த ஆண் பிள்ளைக்கு இவ்வளவு சங்கோசம்! இப்போது என்ன செய்வேன், அதில் எனது நகைகளெல்லாம் இருந்தனவே!



ஏன் இப்படிக்
கஷ்டப்படவேண்டும்
ஸாரிடோன்
எல்லா வலிகளையும்
பத்தே நிமிஷத்தில் நிறுத்துகிறது


இப்பொழுது!
பிரஷின் ஒவ்வொரு
வருடலிலும் கூடுதல்
துலக்கும் வன்மை!
நீர் கடக்காது
நனைவுமேற்காது
பற்களைச் சுத்தப்படுத்தி
வெண்மையாக்குவதில்
60% அதிக பயன் தரத்
தக்கது.
ஒரு வருட உத்தரவாத
முடையது.
இதோ மீண்டும்
மிருகங்களின்
மயிரே
கிடையாது
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
Dr. West's
TOOTH PASTE
விநியோகஸ்தர்கள்:
விபரங்களுக்கு:
எம். டி. ஜெப்ஜுர் & கோ (இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — கராச்சி மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright

D. W. 6283



Edited, Printed and Published by R. Krishnamurthy at the
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras





டால்டாவில் வறுத்த பூரிகள் வாயில் கரையுகின்றன—மேலும் ஊக்கத்தையும் அளிக்கின்றன!

டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்துமட்டுமன்று—அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடியதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல்செய்ய உதவும் சாதனத்தின் அறிந்த சக்தையளிக்கும் திறமையைக் கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை—அது அவர் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையை யளிப்பதோடு அவர் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.

* ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சக்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. A461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 48-23 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.



பரிசோதனை

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

18

மாலை நாலு மணி சுமாருக்கு ராமநாத பாபுவின் இரண்டு சிநேகிதர்களும் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்தார்கள். ராமநாத பாபு அவர்களைப் பார்த்ததும் புன்முறுவலுடன் "வேட்டை எப்படி? ஏதாவது கிடைத்ததா?" என்று விசாரித்தார்.

"சும்மா ஒன்றுமில்லாமல் திரும்பி விடுவோமா, நாங்கள்? நீ வராமல் இருந்து விட்டாயே! வேட்டை ஆடாவிட்டாலும் வேடிக்கையாவது பார்க்க வந்திருக்கக் கூடாதா?" என்று கேட்டார் ராமச்சந்திர சர்மா.

"போதுமே! 'வைத்தியக்காரனைச் சுற்றிப் பத்துப் பேர்' என்பார்களே, அது போல வேட்டைக்குப் போகிற உங்களோடு நானும் சுற்றித் திரிய வேண்டுமாக்கும்!"

"உனக்கு என்ன தெரியும்? வேட்டைக்குப் போகிறவர்களுடன் போனால் காட்டில் எவ்வளவோ அழகான காட்சிகளையெல்லாம் பார்க்கலாம்!"

"அது மட்டுமா! நீங்கள் செய்யும் கொலைகளையெல்லாம்கூடப் பார்க்கலாம் இல்லையா?"

"அதெப்படிப் பார்க்க முடியும்? நீ ஒரு மூலையில் இருப்பாய்; நாங்கள் ஒரு மூலையில் இருப்போம். நாளைக்கு எங்கள் பின்னோடு வந்துதான் பாரேன்!"

"வேண்டவே வேண்டாம், அப்பா! நீங்கள் மட்டும் போய்விட்டு வாருங்கள், போதும்."

"ஏதோ, காட்டுப்புறத்துக்கு வந்திருக்கிறீர்கள். ஒரு நடை போய்ப் பார்த்து விட்டுத்தான் வாருங்களேன், பொழுது போக்காக இருக்கும்!" என்றார் ஜமீன்தார்.

"அதுதான் நானும் சொல்கிறேன்; கேட்கமாட்டேன் என்கிறான். நீங்களே சொல்லியாச் செய்யுங்கள்!" என்றார் ராமச்சந்திர சர்மா.

மறு நாள் காலை சிநேகிதர்களின் பிடிவாதத்தின்பேரில், ராமநாத பாபுவும் காட்டுக்குப் புறப்பட்டார். வண்டி இரண்டு மைல்களுக்கு அப்பால் சென்று ஒரு காட்டுப் பாதையில் நின்றது. மூவரும் வண்டியிலிருந்து இறங்கினர்.

"பின்னோடு வருவதாயிருந்தால் வா! இல்லையேல், அதோ இருக்கும் குன்றின் மேல் உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிரு. நாங்கள் வேட்டையாடிவிட்டு வருகிறோம்" என்று கூறி ராமச்சந்திர சர்மா, தன் நண்பருடன் புறப்பட்டுச் சென்றார்.

ராமநாத பாபு பக்கத்தில் இருந்த குன்றின்மேல் ஏறி நின்று கொண்டு வேடிக்கை பார்க்கலானார்.

அருகாமையிலேயே அடர்ந்த புதர்கள் இருந்தன. கூட வந்திருந்த வேடர்கள் காட்டுப் பன்றிகளை பயமுறுத்திப் புதர்களுக் குள்ளிருந்து அவைகளை வெளிவரச் செய்வதில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் புதருக்குள் சலசலப்புச் சத்தம் கேட்டது. வேடர்கள் "எசமான், ஜாக்கிரதை! காட்டுப் பன்றி உள்ளேயிருக்குதுங்க!" என்று ராமநாத பாபுவை எச்சரித்துவிட்டுப் புதர்களைக் கம்பால் குத்த ஆரம்பித்தனர்.

திடீரென்று ஒரு பெரிய காட்டுப் பன்றி அம்பு போலப் பாய்ந்து ராமநாத பாபுவின் பக்கம் ஓடி வந்தது. பீதியடைந்த ராமநாத பாபு குன்றிலிருந்து ஒரு தாவு தாவிக்

குதித்தார். கால்கள் வழுக்கிவிட்டன. அவ்வளவுதான்; கடகடவென்று உருண்டு வந்து தரையில் விழுந்தார். பன்றி நேரே ஓடிவிட்டது. நல்லவேளை, ராமநாத பாபு அப்படி யிப்படி நகராமல் இருந்த இடத்திலேயே நின்றிருந்தாரானால் அது அவரைப் பிராண்டி ஹிம்ஸித்திருக்கும்.

ராமநாதபாபு விழுந்துவிட்டதைக் கண்டதும் இரண்டு ஆட்கள் ஓடிச் சென்று அவரைத் தூக்கி நிறுத்தினர். ஆனால் அவரால் நிற்க முடியவில்லை. அவர் வலி பொறுக்க மாட்டாமல், "என் முழங்கால் மூட்டு நழுவிவிட்டது. இனி என்னால் நிற்க முடியாது!" என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் இரண்டு வேடர்களின் முகமும் வறண்டுவிட்டது.

அதே சமயத்தில் துப்பாக்கி சுடும் சத்தமும் காதில் விழுந்தது.

இருவரும் மெதுவாக ராமநாத பாபுவைத் தூக்கிக் கொண்டு வந்து வண்டியில் கிடத்தினர். அவர்களில் ஒருவன் ராமநாத பாபுவின் சிநேகிதர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிப்பதற்காக ஓடினான்.



சிறிது நேரத்திற்கெல்லாம் ராமச்சந்திர சர்மா, தன் நண்பருடன் வேறு வழியாக அங்கு வந்து சேர்ந்தார். ராமநாத பாபுவைப் பார்த்ததும், "இது என்ன இது?" என்று பதட்டத்துடன் கேட்டார்.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த வேடன், "எசமான்! ஐயா, பன்றிக்குப் பயந்து பாறையிலே ஒரு புறம் நகரவே, கால் தவறிக் கீழே விழுந்து விட்டாருங்க; கால் மூட்டு நழுவிப் போய் விட்டதுங்க!" என்று கூறினான்.

"அட ஈஸ்வராமே! நாம் பலவந்தப் படுத்தி அழைத்துக் கொண்டு வந்ததல்லவா பிசகாய்ப் போய்விட்டது!" என்று ராமச்சந்திர சர்மா தன்னைத்தானே நொந்து கொண்டார்.

"உங்கமேலே என்ன தப்புங்க? தப்பெல்லாம் எங்க மேலேதான்! நாங்கள்தானே அவர் இருந்த பக்கமாகப் போய்ப் பன்றியை விரட்டினோம்?...... இன்று வீட்டுக்குப் போனால் ஐயா எங்கள் முதுகுத் தோலை உரிச்சு விடுவாருங்க!...... நீங்க என்னை செய்வீங்க, நாங்க கவனிச்சிருக்கணுங்க! என்றான் வேடன்.

"அதெல்லாம் ஒருவர் மேலும் தப்பில்லை; என்னுடைய போதாத காலம்! அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?... சரி, புறப்படுங்கள், கிராமத்துக்குப் போவோம்!" என்று கூறி, எல்லாரையும் சமாதானப் படுத்த முயன்றார் ராமநாத பாபு.

வண்டி கிராமத்தை நோக்கிப் புறப்பட்டது. ராமச்சந்திர சர்மாவும் அவருடைய சிநேகிதரும் வருத்தம் தோய்ந்த முகத்துடன் வண்டியின் பின்னாலேயே கிராமத்தை நோக்கி நடந்தனர்.

19

வண்டி கிராமத்தை அடைவதற்கு முன்னாலேயே ஒருவன் ஓடிச் சென்று, நடந்த சம்பவத்தை ஜமீன்தாருக்கும் நந்தராமுக்கும் தெரிவித்தான். ஜமீன்தாரும், நந்தராமும் இதைக் கேட்டதும், கவலையுடன் வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டு வண்டியை எதிர்பார்க்கலாயினர்.

வாசலில் வண்டி வந்து நின்றதும், "யார் அப்பா ஐயாகூட இருந்தது?" என்று ஜமீன்தார், அதிகார தோரணையில் கேட்டார்.

ஒருவன் பயந்த குரலில், "நானும் மைசாமியும் இருந்தோம், எசமான்!" என்று பதில் அளித்தான்.

"ஏண்டா, உங்களுக்கு மூளை எங்கேடா போச்சு? விழக்கூடிய இடத்தில் ஐயாவை ஏன் உட்கார வைத்தீர்கள்?"

"இல்லை எசமான், ரொம்ப உயரத்திலே இல்லீங்க, எசமான்!......"

"பின்னே எப்படி விழுந்தார்?"

இந்தக் கேள்விக்கு அவன் பதில் அளிக்கவில்லை.

"ஏண்டா வாயைத் திறக்கக் காணோம்?... நந்து, பிரம்பை எடுத்துக் கொண்டு வா,

சொல்கிறேன் ... மைதுவா எங்கேடா?" என்று அதட்டினார் ஜமீன்தார்.

மைதுவா வண்டிக்குப் பின்னாலிருந்து மெதுவாகத் தலையை நீட்டினான். சந்து பிரம்பை எடுத்துக்கொண்டு வந்ததும், "பாபுஜியை மெதுவாக இறக்கி உள்ளே அழைத்துப் போங்கள்!" என்று கூறி விட்டுப் பிரம்பை வாங்கிக்கொண்டு ஜமீன்தார் வேடர்களை நெருங்கினார். இதைப் பார்த்த ராமநாத பாபு, "டாகுர்ஜி, அவர்கள்மேல் ஒரு குற்றமும் இல்லை. நானாகத்தான் அங்கே போய் நின்றேன். அவர்களை அடிக்காதீர்கள், விட்டு விடுங்கள்" என்று சொன்னார்.

"ஆமாம், அப்பா! நடந்தது நடந்து விட்டது. இனிமேல் அடித்து என்ன வரப்போகிறது?'......விட்டுவிடுங்கள்!...... இங்கே வந்து இவருடைய காலைப் பாருங்கள்!" என்றான் சந்தரம்.

"இந்தத் தடவை போனால் போகிறதென்று விட்டுவிடுகிறேன். இனிமேல் இதுமாதிரி ஏதாவது தப்பிதம் நடந்தானால் தோலை உரித்து விடுவேன், போங்கள்!' என்று கூறி, ஜமீன்தார் ராமநாத பாபுவைப் பார்க்க வண்டியின் அருகில் வந்தார்.

ராமநாத பாபுவின் முழங்கால் வீங்கிப் போயிருந்தது. ஜமீன்தார் ஓர் ஆளைக் கூப்பிட்டு, "ஓடிப் போய்ப் புதுவாவைக் கையோடு அழைத்து வா!" என்று ஏவினார்.

புதுவா அந்தப் பக்கத்தில் சுளுக்கு எடுப்பதிலும், ஒடிந்த எலும்புகளைக் கட்டுக் கட்டிச் சரிப்படுத்துவதிலும் பெயர் போனவன். அவனை அழைத்து வர ஆளை அனுப்பி வைத்ததும், ராமநாத பாபுவை அறைக்கு எடுத்து வந்து ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர்.

"இவர் காலை எப்படிச் சரிப்படுத்துவது?" என்று கவலையுடன் கேட்டார் ராமச்சந்திர சர்மா.

"வைத்தியனுக்குத்தான் ஆள் அனுப்பியிருக்கிறேனே! இதோ, வந்து விடுவான்!" என்று சொன்னார் ஜமீன்தார்.

"காட்டுப்புறத்தானுக்கு என்ன தெரியப்போகிறது? அவன் ஏதாவது ஒன்றிருக்க ஒன்று செய்துவிட்டால் ...?" என்று பயந்தார் ராமநாத பாபு.

"அதெல்லாம் பயப்படாதீர்கள்! அவன் ரொம்பக் கெட்டிக்காரன். சுளுக்கு விஷயத்தில் டாக்டர்கள் எல்லாம்கூட அவனிடம் பிச்சைதான் வாங்க வேண்டும்!" என்றார் ஜமீன்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் புதுவா வந்து சேர்ந்தான். "அடேய் புதுவா, ஐயாவின் கால் முட்டு நழுவி விட்டது. அதை உன்னால் சரிப்படுத்த முடியுமா என்று பார்!" என்றார் ஜமீன்தார்.

"இதோ சரிப்படுத்தி விடுகிறேனுங்க!" என்று சொல்லி, புதுவா ராமநாத பாபுவின் கால்களைக் கவனித்தான். பிறகு "எசமான், கொஞ்சம் துணியும், ஒரு சின்ன மூங்கில் சிம்பும் வேணுமுங்கோ!" என்றான்.

அவன் கேட்டவை உடனே வந்து சேர்ந்தன. சிகிச்சையும் ஆரம்பமாயிற்று.

"உன்னால் முடியாமற்போனால் சொல்லி விடு, அப்பா! ஒன்றிருக்க ஒன்று செய்து விடாதே!" என்று பயத்துடன் கூறினார் ராமநாத பாபு.

"இதென்னங்க! அந்த சிம்புத்தாலே சரி செய்து விடுகிறேன், பாருங்க!" என்று கூறி, முழங்கால் முட்டைச் சரி



செய்து, சிம்பு வைத்துத் துணியால் நன்கு கட்டி விட்டான் புதுவா.

"என் புதுவா, ஏதாவது மருந்து-கிருந்து போட வேண்டுமா?" என்று கேட்டார் ஜமீன்தார்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாமுங்க! கொஞ்சம் விளக்கெண்ணெய் மட்டும் தடவினால் போதுங்க!"

"சரி, நீயே வந்து தினம் போட்டு விட்டுப் போ!" என்றார் ஜமீன்தார்.

"ஆமாம், நான் எழுந்து நடக்க எத்தனை நாட்களாகும்?" என்று இடையில் கேட்டார் ராமநாத பாபு.

"இன்றைக்கு நாலாவது நாள் நன்றாக நடக்கலாமுங்க! ...... நான் போய் விட்டுச் சாயந்திரம் வருகிறேனுங்க! என்று கூறி விட்டுப் புதுவா சென்றான்.

அவன் போன பிறகு, "ஆள் கெட்டிக்காரன் தான்! அதற்குள் வலி தெரியாமல் காலைச் சரி செய்து விட்டானே!" என்றார் ராமநாத பாபு.

"அது தான் அப்பொழுதே சொன்னேனே! இந்தப் பக்கத்துக்கே இவன் இம்மாதிரி வைத்தியம் செய்வதில் ரொம்பக் கெட்டிக்காரன்!" என்றார் ஜமீன்தார்.

* * *

"ஏன் ராமசந்தர்! இன்னும் நாலைந்து நாள் இந்த இடத்தை விட்டு நகர முடியாது. எனக்காக நீ பாடத்தைக் கெடுத்துக் கொண்டு இங்கு வீணாக உட்கார்ந்திருப்பானேன்? இன்று சாயந்திரமே ஊருக்குப் போய்விடேன்!" என்றார் ராமநாத பாபு.

"உன்னைத் தனியாக விட்டுவிட்டா? அதெல்லாம் முடியாது, அப்பா!"

"தனியாக என்ன? இதோ இருக்கிறவர்கள் எல்லாம் நமக்கு வேண்டியவர்கள் தானே?"

"அது சரி, இருந்தாலும் ......"

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. நான் கால் சரியானதும் வந்து விடுகிறேன்?"

"சரி, ஏதோ லீவைக் குஷியாகக் கழிப்போம் என்றால் இப்படி யாகிவிட்டது! முன்பே தெரிந்திருந்தால்......?"

"என்னவோ அசடுமாதிரிப் பேசுகிறாயே! பின்னால் நடக்கப் போவதையெல்லாம் மனிதன் தெரிந்து கொண்டிருந்தால் இது மாதிரித் தப்பிதங்கள் செய்வானா?"

"இப்படிப் பேசுவது மனித சுபாவம், ராமநாத்!" என்றார் ராதாசரண்.

"அது சரி,......நந்து! இன்று சாயந்திர வண்டிக்கு இவர்களை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார் ராமநாத பாபு.

"சரி, ஏற்பாடு செய்து விடுகிறேன்!" என்று பதில் அளித்தான் நந்தராம்.

* * *

ராமசந்திர சர்மாவும் ராதாசரணும் விடை பெற்றுக்கொண்டு ஊருக்குப் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் ஜமீன்தாரிணியும், யசோதாவும் ராமநாத பாபுவைப் பார்க்க வந்தார்கள். டாகுர்ஜியும் நந்தராமும் ராமநாதபாபுவின் கட்டிலருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட ஜமீன்தாரிணி தன் தலைமுக்காட்டைச் சரி செய்து கொண்டு, "நம் ஊருக்கு வந்து பாபுஜி கஷ்டப்படும்படி யாகிவிட்டதே!" என்றாள்.

"எங்கிருந்தாலும் படுவதைப் பட்டுத் தானே ஆகவேண்டும்?"

"அது சரி, இருந்தாலும் உங்கள் அப்பா-அம்மா இதைக் கேள்விப்பட்டால், பையனைக் கூப்பிட்டுக் காலை ஒடித்து அனுப்பி விட்டார்களே என்று நினைத்துக்கொள்ள மாட்டார்களா?"

"அதெல்லாம் ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டார்கள். வீணாக ஏன் மனதைச் சிரமப்படுத்திக் கொள்கிறீர்கள்? அவர்கள் காதுக்கு இந்தச் சமாசாரம் எட்டக்கூட எட்டாது!" என்று ஜமீன்தாரிணியின் பக்கத்தில் வருத்தத்தினால் வாடிய முகத்துடன் நின்று கொண்டிருந்த யசோதாவைப் பார்த்தவாறே கூறினார் ராமநாத பாபு.

பிறகு, சிறிது நேரத்திற்கெல்லாம் விடை பெற்றுக்கொண்டு ஜமீன்தாரிணியும் யசோதாவும் உள்ளே போய்விட்டார்கள்.

20

காலை சுமார் எட்டு மணி இருக்கும். ராமநாத பாபுவுக்குக் கட்டுக் கட்டி மூன்று நாட்களாகி விட்டன. கால் வீக்கம் குறைந்து விட்டது. வலியும் இல்லை.

காலையில் கட்டுக் கட்ட வந்திருந்த புதுவா, "எசமான், காலை முதல் நீங்கள் நடக்கலா மாங்க!" என்று சொல்லி விட்டுப் போனான். ராமநாதபாபு எழுந்து படுக்கையில் உட்கார்ந்திருந்தார். அந்தச் சமயம் அறையில் வேறு யாரும் இல்லை. யசோதரா உள்ளே நுழைந்து கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த மேஜையின்மீது தான் கையில் கொண்டு வந்திருந்த பாலையும் பட்சணத்தையும் வைத்துவிட்டுத் தலை குனிந்தவாறு ஒதுங்கி நின்றாள்.

ராமநாத பாபு சுற்றுமுற்றும் ஒரு முறை கவனித்துவிட்டு, "ஜஸ்ஸோ!" என்று அன்பு ததும்பக் கூப்பிட்டார்.

யசோதரா மிகவும் மெதுவான குரலில், "ஏன்?" என்று கேட்டாள்.

"சௌக்கியந்தானே?"

"ஏதோ இருக்கிறேன்!"

"ரொம்ப இளைத்துப்போய் விட்டாயே! இங்கு உனக்கு ஏதாவது கஷ்டமா யிருக்கிறதா?"

யசோதரா ஒரு தடவை தன் தலையை உயரத் தூக்கி ராமநாத பாபுவைப் பார்த்தாள். அவருடைய கண்களும் அவளுடைய கண்களும் ஒரு க்ஷணம் சந்தித்தன. அடுத்த க்ஷணம் அவள் தலை குனிந்தாள். யசோதராவின் பாவம் ததும்பிய பார்வையிலிருந்தே ஒருவாறு அவளுடைய நிலையை ஊகித்துக் கொண்ட ராமநாத பாபு, "ஜஸ்ஸோ! உன்னுடைய சிரமத்தை நான் நன்கு அறிவேன். ஆனால் அதைத் தவிர்க்க எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. நாமிருவரும் ஒருவரை யொருவர் மறக்க முயலுவதுதான் அதற்குச் சரியான வழி என்று எனக்குப் படுகிறது!" என்றார்.

யசோதரா தலை குனிந்தபடியே, "அது நடவாத காரியம் ஆயிற்றே!" என்றாள்.

"உண்மைதான்! ஆனால் அதைத் தவிர வேறு வழியே தோன்றவில்லையே, என்ன செய்வது? உனக்கு ஏதாவது தோன்றினால் சொல்லேன்!" என்றார் ராமநாத பாபு.

யசோதரா ஒன்றும் பதில் சொல்லவில்லை. ராமநாத பாபு சிறிது நேரம் கழித்து, "என் கால் சரியாகி விட்டது. நாளைக் கழித்து ஊருக்குப் போய்விடுவேன். அப்புறம் நாம் எப்பொழுது சந்திப்போமோ!" என்றார்.

இதைக் கேட்டதும் யசோதராவின் கண்களில் கண்ணீர் பெருகியது. அதைக் கண்ட ராமநாத பாபுவின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. அவர் யசோதராவின் கைகளை அன்புடன் பற்றி, "வருத்தப்படுவதனால் என்ன பயன்? எனக்கும் உனக்கும் அன்பு ஏற்படுவதை ஈசன்கூட விரும்பவில்லை போலும்! இல்லாவிட்டால்......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவர், யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டுச் 'சட்'டென யசோதராவின் கைகளை விட்டுவிட்டார். யசோதராவும் சிறிது விலகி நின்று கொண்டாள். அடுத்த கணத்தில் உள்ளே நுழைந்த சுந்தரம், ராமநாத பாபுவையும் யசோதராவையும் ஒரு முறை கூர்ந்து கவனித்தான். அவன் முகம் அப்போது கம்பீரமாகத் தோற்ற மளித்ததை ராமநாத பாபு கவனித்தார். அவன் வறண்ட குரலில், "நீங்கள் பால் குடித்து விட்டீர்களா?" என்று ராமநாத பாபுவைக் கேட்டான்.

"இப்பொழுதுதான் வந்தது; இதோ குடிக்கிறேன்!" என்று சிறிது தடுமாறிய குரலில் பதில் அளித்தார் ராமநாத பாபு.

சுந்தரம் யசோதராவைப் பார்த்து, "போய் உன் வேலையைப் பார்!" என்றான்.

யசோதரா ஒன்றும் பேசாமல் அங்கிருந்து சென்றுவிட்டாள்.

சுந்தரம் அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்தான். ராமநாதபாபு சிற்றுண்டி அருந்தியவாறே அவன் உள்ளத்திலுள்ளதை அறிய முயற்சிப்பவர்போல் அவனுடைய முகத்தையே கவனிக்கலானார்.



பிரிவினை!

முதல்வர்:—இத்தனை நாளும் அவ்வளவு அன்னியோன்னியமாக இருந்த நீங்களும் உங்கள் தம்பியும் இப்படிப் பிரிந்து விட்டீர்களே, வீட்டிலே பெண்களுக்குள் ஏதாவது சச்சரவோ?

இரண்டாமவர்:—அதெல்லாம் ஒன்றுமில்லை, ஸார்! நாங்கள் பிரிந்தால் எங்கள் 'கூபன்'களும் பிரிந்து விடுமே. மண்ணெண்ணெய், சர்க்கரை வெல்லம் இரண்டு பங்கு கிடைக்கும் பாருங்கோ. அதற்காகத்தான்!

—எஸ். வி. ராமன்.

படித்துப் பார்!

தமிழர் இசைக் கருவிகள்

[ஆசிரியர்: பி. கோதண்டராமன் எம்.ஏ., பி.எல்.: பிரசுரம்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்: விலை: ரூ. 1—1—0.]

சங்கீதக் கலை முதன் முதலாக உதித்த இடம் தமிழ்நாடு என்று சொல்வார்கள். அது எவ்வளவு உண்மை என்பது இந்தப் புத்தகத்தில் தரப்பட்டிருக்கும் இசைக் கருவிகளைப் பார்த்தால் நன்கு தெரியவரும். ரொம்ப ரொம்பப் பழைய காலத்தில் தமிழர்கள் தோல் கருவிகளையும், நரம்புக் கருவிகளையும் இசைக் கலைக்கு உபயோகப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆசிரியர் அந்தத் தோல் கருவிகளும் நரம்புக் கருவிகளும் நாளடைவில் எப்படி எப்படி முன்னேறி யிருக்கின்றன என்பதைப் படங்கள் மூலமாகவும் விளக்கங்கள் மூலமாகவும் வெகு நன்றாக விளக்குகிறார். யாழில் தான் எத்தனை வகை!—பேரி யாழ், செங்கோட்டு யாழ், சகோட யாழ், மகர யாழ்!

இவை போக இன்னும் பல இசைக் கருவிகளையும் பற்றி ஆசிரியர் எழுதியிருக்கிறார். வி. எம். ராமச்சந்திர செட்டியார் அவர்கள் நெல்லையப்பர் கோவிலிலிருந்தும் திருவொற்றியூர் கோவிலிலிருந்தும் பல படங்களை எடுத்து அநுபந்தமாக அளித்திருக்கிறார்.

சுவாமி சுத்தானந்த பாரதியவர்கள் ஒரு முகவுரை அளித்திருக்கிறார்கள். 'தமிழர் இசைக் கருவிகள்' என்ற இந்நூல் பாரத் தமிழருக்குப் புதிய இசை அளிக்கிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே!

[ஆசிரியர்: கோ. த. சண்முகசுந்தரம்: பிரசுரம்: அன்னை நிலையம், ராயவரம், புதுக்கோட்டை: விலை: ரூ. 2.]

வாழ்க்கையிலுள்ள சோகங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது "ஏன் இந்த வாழ்க்கை?" என்று ஒரு விரக்தி ஏற்பட்டு விடுகிறது. ஆனால் அந்தச் சோகங்களின் தத்துவத்தை உணர்ந்து அவைகளையும் ரஸிக்கக் கற்றுக் கொண்டுவிட்டால், பிறகு "வாழ்க்கை வாழ்வதற்கே!" என்பது நிச்சயமாகி விடுகிறது!

முள் நிறைந்த ரோஜாச் செடியைச் சிருஷ்டித்த ஆண்டவன், அந்த செடியில் மனோகரமான வாசனை வீசும் அழகு வாய்ந்த ரோஜா மலரையும் சிருஷ்டித்திருக்கிறான். அது போலத்தான் வாழ்க்கையும். ஆகவே, வாழ்க்கை முழுவதும் முள்ளும் படுக்கைதான் என்று உதறித் தள்ளிவிட முடியாது.

வாழ்க்கையிலுள்ள இனிப்பு கசப்புக்களையும் இன்ப துன்பங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் ஒன்பது சிறு கதைகள் இந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன.

கலைவாணி கைவிடப்பட்ட அபலைப் பெண் நாயகத்தின் கதை நம் உள்ளத்தையும் சோகத்தில் நனைத்து விடுகிறது. ஒவ்வொரு கதையிலும் சோகம்தான் அடிநாதமாக அமைந்துள்ளது.

புத்தகத்தைப் படித்து முடித்ததும், நாமும் கண்ணீரும் கம்பலையுமாக 'வாழ்க்கை வாழ்வதற்கே!' என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

பாலை வனத்தில்

[மொழிபெயர்ப்பவர்: மணி சகோதரர்கள்: பிரசுரம்: புது முறை வெளியீடு, ஏரிக் கரைத் தெரு, பழைய மாம்பலம், சென்னை: விலை: அணா 13.]

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெண் மணல் பரந்து கிடக்கும் பாலைவனத்திலே நடந்த ஒரு ரஸமான காதல் கதை இந்தப் "பாலைவனத்"தில் அடங்கியிருக்கிறது.

அரேபிய தேசத்து அழகி லைலாவும், இந்துஸ்தானத்துப் போர் வீரனும் கொண்ட காதல், வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரந்து கிடக்கும் பாலை வனத்து வெண்மணற் பரப்பைப் போலவே அவர்கள் உள்ளத்திலும் பரந்து கிடந்தது. லைலாவின் தந்தையிடமும் அவர்கள் மனோரதம் பூர்த்தியாவது சாத்தியமில்லாமற் போகவே, கதிரவனின் கடுமையான கிரணங்களிலும் கனல் வீசும் அந்தப் பாலைவன மணலைப் போலவே காதலர்களின் உள்ளத்திலும் கனல் வீசுகிறது.

லைலாவினுடைய தந்தையின் விருப்பப்படி அவளை ஒரு 'ஆமுன்' (இருட்டுத் தலைவன்) மணந்ததும், காதலர்களின் உள்ளம் வறண்ட பாலைவனப் பிரதேசத்தைப் போலவே சூனியமாய்ப் போய் விடுகிறது. பரிதாபம்!

கல்கி



ALKI அக்டோபர் 13, 1946 4 அண

பட்டுப் புடவை

தீபாவளிக் கென்று ஸ்பெஷலாக பட்டு சேலைகளும் இரா ஜவுளி களும் நூதன நாகரிக டிசைன் களில் ஏராளமாக வந்து குவிந் துள்ளன. உங்களது தேவைக்கு முந்துங்கள்



★

M. நடேச அய்யர் & கோ

9, வடக்கு மாட வீதி

மயிலாப்பூர் — மதராஸ்

CHITRALAYA



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதி களைப் போக்குவதுடன் கண் மறைப்பு முதலிய கண் சம்பந்த மான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதி களையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் ஸிடி ஏஜண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும், பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு :

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

Regd. No. M. 4392

